NLDB
ESTD 1973



# Annual Report 2010

## National Livestock Development Board

# வருடாந்த அறிக்கை

தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபை

**பணிப்பாளர் சபையினரின் அறிக்கை**

2010 ஜனவரி 01இல் இருந்து 2010 டிசம்பர் 31 வரையிலான காலப்பகுதிக்குரிய தேசிய கால்நடை அபிவிருத்திச் சபையின் (NLDB) இந்த அறிக்கையைச் சமர்ப்பிப்பதில் சபையின் தலைவரும் பணிப்பாளரும் சபையினரும் மகிழ்ச்சியடைகின்றனர்.

## 1.0. அறிமுகம்

தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபை 1972 ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க அரச விவசாய கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின் கீழ் 1973 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. அதன் வெளிக்கள நடவடிக்கைகள் 1974 இல் ஆரம்பித்தன. 1977 இல் புனரமைக்கப்பட்ட தேசிய கால்நடை அபிவிருத்தி சபையின் கடமைகள், 1977 இல் கால்நடைகள் அருகி வருவதைக்கட்டுப்படுத்துவதும், பாலுக்கும் பாரம் இழுப்பதற்குமென கால்நடை வளர்ப்புக் கான திட்டத்தைத் தரமுயர்த்துவதுமாகும். தேசிய கால்நடை அபிவிருத்தி சபை தற்சமயம் 30 கால்நடை மற்றும் ஊடு பயிர்செய்கை ஒன்றிணைந்த பண்ணைகளை நடத்தி வருகிறது. இப் பண்ணைகளில் கால்நடைகளுடன் தென்னை பயிர்ச்செய்கைகளும் சபை நடத்தி வருகிறது. அதேவேளை,விவசாயச் செய்முறை மற்றும் அனுபவங்களை விவசாயிகளுடன் பகிர்ந்து கொள்ளவென ஒரு பயிற்சி நிலையத்தையும் நடத்தி வருகிறது.

## 1.1 தொலைநோக்கு

எமது மக்களின் சமூக, பொருளாதார நிலைமைகளை மேம்படச் செய்யவென தரமான இனப்பெருக்க சாதனங்கள், கால்நடை மற்றும் விவசாயப் பொருட்களை உற்பத்தி செய்யும் இலங்கையில் சிறந்த சுயபூர்த்தியுள்ள அமைப்பாகச் செயற்படுவதாகும்.

## 1.2. குறிக்கோள்

பலதரப்பட்ட விவசாய மற்றும் சுற்றுப்புறச் சூழல் வலயங்களில், மன நிறைவுடனான தொழிலாளர்களை ஈடுபடுத்தி, கால்நடை மற்றும் பயிர்செய்கை ஒன்றிணைந்த பண்ணைகளை நடத்துதல்.

- ❖ கால்நடை மற்றும் பாற் பண்ணைப் பொருட்கள் சம்பந்தமாக சுய பூர்த்தியுள்ள நாடாக இலங்கையை ஆக்கவென. இனவிருத்தி விலங்குகளை தொடர்ச்சியாக விவசாயிகளுக்கு வழங்கும் நோக்கில் நியாயமான காலப்பகுதிக்குள் கால்நடை அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

- ❖ சபையின் உற்பத்தியையும், இலாபமீட்டும் தன்மையையும் அதிகரிக்கவென புதிய தொழில் நுட்பத்தை உபயோகித்து, கால்நடை மற்றும் விவசாய உற்பத்திகளை அதிகரித்தல்.

- ❖ நாட்டின் பணப் பயிர் உற்பத்திக்கு உதவும் வகையில், தெரிவு செய்யப்பட்ட பண்ணைகளில் பணப் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளல்.
- ❖ கால்நடை மற்றும் பயிர்ச்செய்கைகளில் இருந்து உச்சக்கட்ட உற்பத்தியைப் பெறுதல்.
- ❖ கால்நடை மற்றும் பயிர்ச்செய்கை இணைந்த பண்ணை வழிமுறைகள் மூலம் உச்சக்கட்ட உற்பத்தியை பெறுதலும், புவியியல் நன்மையை அடிப்படையாகக் கொண்ட பயிரச்செய்கை வழிமுறைகளைக் கடைப்பிடித்தலும்.

## 1.3 பொதுவான இலக்குகள்

1.3.1 ஙெ்கு பொருட்களை அடிப்படையாகக்கொண்ட கைத்தொழில்கள் மூலம் கிடைக்கும் மேலதிக நிதியை உபயோகித்து சகல பண்ணை நடவடிக்கைகளையும் உச்சக்கட்டத்தில் பேணுதல்

1.3.2 சந்தை நடவடிக்கைகளில் வெற்றிகரமாகப் போட்டியிடவென, புதிய தொழில்நுட்பம்,நிபுணத் துவம், மூலதனம் சிறந்த முகாமைத்துவ நடவடிக்கைகள் என்பன அறிமுகம் செய்யப்படும் அதேசமயத்தில், செலவினத்தைக் குறைத்தலும் உற்பத்தியை அதிகரித்தலும்.

1.3.3 தனியார் தொழில்துறையின் பங்களிப்புடன் இந்த விவசாயப் பண்ணைப் பிரிவுகளை, இலாபம் தரும் வர்த்தக அமைப்புகளாக மாற்றவென சிறந்த சந்தைப்படுத்தல் வழிமுறைகளுடன்கூடிய புதிய சந்தைகளுக்குள் பிரவேசிப்பதற்கான சாத்தியங்களை ஆராய்தல்.

## 1.4 நோக்கங்கள்

இத்தகைய இலக்குகளைப் பெறுவதற்கென தரமான இனவிருத்திப் பொருட்களை குறைந்த விலையில் தேசிய கால்நடை அபிவிருத்தி சபை பொதுமக்களுக்கு வழங்கி வருகின்றது. தனிநபர் கால்நடைப் பண்ணையாளருக்கு மாத்திரமல்லாமல், கால்நடை உற்பத்தி சங்கங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், சமுர்த்தி உதவி பெறுவோர் மற்றும் தற்சமயம் மேற்கொள்ளப்படும் அரசாங்க, தனியார் திட்டங்களுக்கும் இவை வழங்கப்படுகின்றன. பசுமாடுகள், எருமை, ஆடு, செம்மறி ஆடு, பன்றி, முயல்,கோழி,காடை பறவைகள் போன்ற எந்த இனங்களில் தேவை ஏற்பட்டாலும், தரமான இனப்பெருக்கப் பொருட்களை வழங்க தேசிய கால்நடை அபிவிருத்தி வள சபை கடமைப்பட்டுள்ளது.

கால்நடைத்துறையை அபிவிருத்தி செய்வதே முக்கிய நோக்கமாகும் என்பதனால், சுய அறிவு மற்றும் அனுபவம் என்பவற்றின் அடிப்படையில் இதுவரை நடவடிக்கை மேற்கொண்டு வந்த விவசாயிகளுக்கு விலங்கின வளர்ப்பு சம்பந்தமான நவீன வழிமுறைகள் சம்பந்தமான அறிவை அவர்களுக்கு தெரிவிக்கும் பொறுப்பையும், தேசிய கால்நடை அபிவிருத்தி சபை மேற்கொண்டுள்ளது. கால்நடைத்துறையை இலாபகரமான தொழிலாக மாற்றுவதே சபையின் முக்கிய நோக்கங்களுள் ஒன்றாகும். இதனை அடைவதற்கென ஒவ்வொரு விவசாய-புவியியல் வலையத்திற்கும் பொருத்தமான வகையில் கலப்பு இன விருத்தி, நல்லின விருத்தித் திட்டங்கள் என்பன பண்ணைகளில் நடைமுறைக்கிடப்படுகின்றன.

தேர்ந்தெடுக்கப்பட்ட பண்ணைகளில் இனவிருத்திப் பொருட்களையும் ஜீவ அணுக்களையும் சேகரித்துப் பாதுகாக்வென, மிகச் சிறந்த ஜேர்ஸி, பிரிஸியன், சஹிவால்,கிலரி,முறா மற்றும் நில்லி-ரவி இனங்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. முக்கியமாக பண்ணை விவசாயிகளுக்கும், பொதுவாக கிராம மக்களுக்கும் சுயதொழில் வேலைவாய்ப்புக்களை உருவாக்குவதில் தேசிய கால்நடை அபிவிருத்தி சபை முக்கிய பங்கை வகித்துள்ளது. பல பண்ணை மற்றும் கோழிப்பண்ணை உட்பட கால்நடைத்துறையின் அபிவிருத்தி காரணமாக, மக்கள் வாழ்க்கைத்தரம் அதிகரித்தது மாத்திரமல்லாமல் அவர்களின் போஷாக்கு நிலைமையும் அதிகரிக்கும்.தேசிய கால்நடை அபிவிருத்தி சபையினால் நிர்வகிக்கப்படும் காணிகளில் மண் வளத் தரம் குறைவதைத் தடுக்கவும், உயிர்த்தன்மை கொண்ட பொருட்களின் மட்டத்தை அதிகரிக்கவுமென சூழல் பாதுகாக்கக்கூடிய காணி முகாமைத்துவ தொழில்நுட்பங்கள் கடைப்பிடிக்கப்படுகின்றன.

### 1.4.1 முக்கிய நடவடிக்கைகள்

சபையின் முக்கிய நடவடிக்கைகள் வருமாறு:

- ❖ கால் நடைகளை வளர்த்து இனவிருத்தி செய்தல்.
- ❖ நியாய விலையில் விவசாயிகளுக்கு தரமான இனவிருத்திப் பொருட்களை வழங்குதல்
- ❖ உச்சக்கட்ட இலாபத்தைப் பெறவென தென்னந்தோட்டங்களை சிறந்த முறையில் பராமரித்தல்.
- ❖ பொருத்தமான பண்ணைகளில் கால் நடை பயிர்ச்செய்கை ஒன்றிணைந்த பண்ணை வழிமுறைகளை மேற்கொள்ளுதல்.
- ❖ முக்கியமாக சிறிய அளவிலான கால்நடைப் பண்ணையாளருக்கும். பொதுவாக விவசாயிகள், மாணவர்கள், விவசாயத்துறையில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள் ஆகியோருக்குப் பயிற்சியும் செய்முறை விளக்கமும் வழங்குதல்.
- ❖ உச்சக்கட்ட இலாபத்தைப் பெறவென பண்ணை மூலப்பொருட்களை உபயோகித்து பெறுமதிமிக்க பொருட்களை உற்பத்தி செய்தல்.
- ❖ மக்கள் மத்தியில் பால் பருகும் பழக்கத்தைப் பிரபல்யப்படுத்தும் வகையில் சுத்தமான பசும்பாலை விற்பனை செய்தல்.

## 2.0 பணிப்பாளர் சபை

2010 ஆம் ஆண்டு ஏப்பிரல் நடாத்தப்பட்ட பொதுத் தேர்தலின் பின் புதிய பணிப்பாளர் சபை ஒன்று நியமிக்கப்பட்டது. இதற்கமைய 2010 ஏப்ரல் மாதத்தில் புதிய அரசாங்கம் பதவிக்கு வந்ததை அடுத்து திரு ஆர்.பி.எல்லேகல அவர்களும் திரு.லக்ஷ்மன் குளுகல்லே அவர்களும் முறையே தலைவராகவும், பிரதித்தலைவராகவும், 2010 ஆம் ஆண்டு மே மாதத்தில் இருந்து நியமிக்கப்பட்டனர்.

2010 ஆம் வருட புதிய பணிப்பாளர் சபையில் கீழ்காணும் அங்கத்தவர்கள் இடம்பெற்றது.

| | |
|---|---|
| திரு. ஆர்.எம்.பி.எல்லேகல | தலைவர் |
| திரு.லக்ஸ்மன் குலுகல்லே | பிரதித்தலைவர் |
| திரு.அனுரஜயசிரி | பணிப்பாளர் |
| திரு.எச்.எம்.குணசேகர | பணிப்பாளர் |
| திரு.எஸ்.பாலசந்திரன் | பணிப்பாளர் |
| திரு.எஸ்.மர்வின் டபிள்யூ பெரேரா | பணிப்பாளர் |
| திரு.டாக்டர் சம்சன் எல்.ஏ.டானியல் | பணிப்பாளர் |
| திரு. ஆர்.அசோக்குமார் | பணிப்பாளர் |
| திரு.டாக்கடர் பிறேமகுமாரத சில்வா | பணிப்பாளர் |
| திரு.ரவீந்திர மனோஜ் கமகே | பணிப்பாளர் |

புதிய பணிப்பாளர் சபையின் முதலாவது கூட்டம் 2010 ஜனவரி 28ம் திகதி நடைபெற்றது. 2010 ஆம் ஆண்டில் 12 பணிப்பாளர் சபைக்கூட்டங்கள் இடம்பெற்றன.

தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபை, கால்நடை வள மற்றும் தோட்ட உட்கட்ட மைப்பு. அபிவிருத்தி மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சின் கண்காணிப்பின் கீழ் கொண்டுவரப்பட்டது. கௌரவ அமைச்சராக ஆறுமுகன் தொண்டமான் இருந்தவுடன் H.R.மித்திரபால பதில் அமைச்சராகவும் நியமிக்கப்பட்டார்கள்.

ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் பெறப்படும் வளங்களை உச்சகட்டத்திற்கு உபயோகித்து, உற்பத்தியை அபிவிருத்தி செய்வதில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டது. இந்த வருடத்தில் சபையின் நிதிவளம் மட்டுப்படுத்தப்பட்டதாக இருந்ததனால், நிதித்துறை சார்ந்த விடயங்களில் தீவிர கட்டுப்பாடு மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. இருந்த போதிலும், மிக அவசியமான அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது. இதற்கமைய கால்நடை முகாமைத்துவம் மற்றும் இனவிருந்தித்திட்டம் என்பவற்றுக்கு உயர் முன்னுரிமை வழங்கப்பட்டது.

பால்பண்ணை கால்நடைகளின் உயிரியல் பெறுமானத்தை மேம்படுத்தவென நாட்டில் முதல் தடவையாக உயிரணு மாற்றத்திட்டம் ஆரம்பிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது. 2009ஆம் ஆண்டில் இந் நடவடிக்கை வெற்றிகரமாக முடிவடைந்தது.

இந்த திட்டத்தின் காரணமாக உயர்தர விலங்கினங்களை உற்பத்தி செய்யவென கால்நடைகளை இறக் குமதி செய்வதற்கான செலவினம் குறைக்ககப்பட்டதோடு. ஆடையாளம் காணப்பட்ட சிறந்த உயிரணு கொண்டு தரமான விலங்கினங்களை எதிர்காலத்தில் உருவாக்க முடியும் என்ற நம்பிக்கையும் ஏற்பட்டது. 2009 ஆம் ஆண்டின் சொற்ப காலத்தினுள் இனவிருத்திப் பசுக்களின் எண்ணிக்கையைத் துரிதப்படுத்தவென, நாட்டில் முதல் தடவையாக பால் தீர்மானிக்கப்பட்ட விந்துவை சபை இறக்குமதி செய்தது. இத்திட்டம் வெற்றிகரமானமுறையில் நடைமுறையில் உள்ளது. மிக அடர்த்தியான பால்தீர்மானிக்கப்பட்ட வித்துகளை இறக்குமதி செய்து, இத்திட்டத்தை முன்னெடுக்கப்படுமென சபை தீரமானித்துள்ளது. இவைகளால் உள்ளுர் பசுக்களை கருத்தரிக்க செய்ய முடியும்.

புதிய சுத்தமான பசும்பால் பாவனையை மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்தவென பால் விநியோகத்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு விரிவுபடுத்தப்பட்டது. மக்கள் மத்தியில் பால் பாவனை அதிகரிக்கப்பட வேண்டும் என்பதே அரசாங்கத்தின் திட்டமாகும். இதன் காரணமாக பால்மா இறக்குமதி குறைப்பதற்கும் மறைமுகமான முறையில் உதவுகின்றபடியால். வெளிநாட்டு நாணயமாற்றில் குறிப்பிடத்தக்க சேமிப்பு ஏற்படுகின்றது. இதன்மூலம் சபையின் பால் விற்பனை வருமானம் அதிகரித்தது மட்டுமல்லாமல், கிராமப்புற இளைஞர்களுக்கும் வேலைவாய்ப்புக்கள் கிடைத்தன.

கணிசமான இடைவெளிக்குப்பின், 2050 கிலோ கிறாம் மேய்ப்புப் புல்களும் லெகுமே விதைகளும் 2010 ஆம் ஆண்டினுள் இறக்கு மதி செய்வதற் சபைக்கு முடிவுமாயிற்றது. இவைகளின் இறக்கு மதி மூலம் பால் பண்ணைகளிள் முக்கியமாக உற்பத்தியிலும் இன விருத்தியிலும் அதிகரிப்பை தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபை எதிர்ப்பார்க்கிறது.

புறொயிலர் இறைச்சியிலும் முட்டை உற்பத்தியிலும் நாட்டில் நிலவிய பற்றாக்குறையை குறைப்பதற்கு மேலதிக 27,000 ஆயிரம் புறொயிலர் தாய் பறவைகளையும் 5000 ஆயிரம் லேயர் தாய் பறவைகளையும் 2009ஆம் ஆண்டினுள் தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபைக்கும் LANLIB என்ற நிறுவனத்திற்கும் மகாவலி கால்நடை வள அபிவிருத்தி ஆகிய நிறுவனங்களுக்கு இறக்குமதி செய்து சபை தனது பங்களிப்பை செய்தது. மேலும், 2010ஆம் ஆண்டில் நிலவிய கட்டுபாட்டுக்கு உடனடித்தீர்வாக மேலதிக 100,000 இலட்சம் ஒரு நாள் வயதுடைய வர்த்தகக் கோழிக்குஞ்சுகளையும் இறக்குமதி செய்யப்பட்டது.

களைகளை அகற்றுதல், காணிகளை சுத்தம் செய்தல் சபையின் அவசர பிரச்சினையாக இருந்த பிரதான காரியாலயம் உட்பட கட்டடங்களை புதுப்பித்தல் ஆகிய வேலைகள் வெற்றிகரமாக 2010 ஆம் ஆண்டினுள் பூர்த்தி செய்யப்பட்டது.

## 3.0 இந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளின் செயலாற்றுகை

### 3.1 உயிரணு மாற்றுத் திட்டம் (Emprya Transfer)





பால்பண்ணைத் தொழிலில் முன்னோடி வேலைத்திட்டமாக உயிரணு மாற்றுத்திட்டம் கால்நடை அபிவிருத்தி சபையினால் 2006ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. சிறந்த கால்நடைகள் பயன்பதரும் விலையில் வழங்கி பால்பண்ணைத் தொழிலுக்கு ஓர் ஊக்கமளிப்பதே இந்த முன்னோடி துணிகர நடவடிக்கையின் நோக்கமாக இருந்தது.

2006ஆம் ஆண்டின் இறுதி அளவில் 200 உறயவைக்கப்பட்ட உயிர் அணுக்கள் இறக்குமதி செய்யப்பட்டன. இவை அனைத்தும் பிரீஸியன், ஜேர்ஸி, ஒஸ்ரோலியன் பிரீஸியன், சஹிவால் சேர்ந்தனவையாகும். இலங்கையின் முதல் முதலாக 196 உயிர் அணு மாற்றங்கள் இடம்பெற்றன. தேசிய கால் நடை அபிவிருத்தி சபைக்கு உயிர் அணு மாற்றுமுறை மூலம் பிறந்த 61 பசுக்கன்றுகள் கிடைத்தன. பிறந்த பின் ஒன்பது கன்றுகள் இறந்தன. ஆக மிச்சமான 52 கால்நடைகளுள் 22 பெண் கன்றுகளும் 30 ஆண் கன்றுகளும் அடங்குகின்றன. இத்தகைய நடவடிக்கை மூலம் பெற்றுக்கொள்ளப்படும் பசுக்கள் நாள் ஒன்றுக்கு 20 லீற்றர் பாலை சுரக்கக்கூடியவையாகும்.

இதற்கான உயிர் அணுக்களை பெறவென உலகத்தில் தற்போது கிடைக்கக்கூடிய சிறந்த காளைகளும் உயர்தர உற்பத்தி கொண்ட பசுக்களும் உபயோகிக்கப்பட்டன. இவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்ட பசுக்கன்றுகள் மிக பெறுமதியுள்ளவையாகும். ஏன் எனில் செயற்கை சினைப்படுத்தல் மூலம் பெற்றுக்கொள்ளப்படுகின்ற பசுக்கன்றுகளிலும் பார்க்க இவை சிறந்ததாக இருக்கின்றது. ஒரு காளை மாட்டிலிருந்து 90,000 தொடக்கம் 10,0000 வரையிலான விந்தணுக்களை பெறமுடியும் என்பதனால் உயிர் அணுமாற்றத்திட்டத்தின் மூலம் பிறந்த

பசுக்கன்றுகள் நாட்டுக்கு மிகவும் பெறுமதியுடையவையாகும். இவைகளால் கிட்டத்தட்ட ரூபா 1800 மில்லியன் வெளிநாட்டு செலாவணியை மிச்சப்படுத்த உதவும். பிறந்த பசுக்கன்றுகளை இதேவிதமான உயிரணுமாற்று திட்டத்திற்கும் பாலைப் பெறுவதற் கும் தரமான இனப்பெருக்கக் காளைகளை உருவாக்குவதற்கும் உபயோகிக்கமுடியும். இதனைக் கருத்தில் கொண்டு குண்டசாலையில் உள்ள செயற்கை சினைப்படுத்தல் நிலையத்திற்கு ஏழுகாளை மாடுகளும் நாட்டின் பாரியளவில் இனவிருத்தி மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு மேலும் 07 காளைகளும் ஏற்கனவே விநியோகித்துள்ளோம்.

**வெளிநாட்டுச் செலாவனியை திருப்பப் பெறுதல்**
**உயிரணு மாற்றுத்திட்டத்தினால் (E.T) பிறந்த 07 ஆண் கன்றுகள் மூலம்**

| | |
|---|---|
| இறக்குமதி செய்யப்பட்ட விந்து விழுங்கு ஒன்றின் விலை | ரூ 3,000.00 |
| உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட விந்து விழுங்கு ஒன்றின் விலை | ரூ 250.00 |
| சேமிக்கக்கூடிய வெளிநாட்டு செலாவனி | ரூ 2,750.00 |

செயற்கைச் சினைப்படுத்தல் நிலையத்திற்கு நன்கொடையாக கொடுக்கப்பட்ட காளை மாடுகளின் எண்ணிக்கை 07 ஒரு காளை
மூலம் எதிர்பாக்கப்படும் விந்து விழுங்கு 10,000

**சேமிக்கப்படும் வெளிநாட்டுச் செலாவணி** **ரூபா 1925மில்லியன்**

**உயிரணு மாற்று முறை (E.T) மூலம் பிறந்த பெண் கன்றுகள் மூலம் (22 கன்றுகள்)**

| | | |
|---|---|---|
| உயிரணு மாற்றுத் திட்டத்திற்கான மொத்த செலவு | ரூபா | 12 மில்லிய |
| பிறப்பு வரை கன்று ஒன்றுக்கு செலவு | ரூபா | 0.23மில்லியன் |
| இனப்பெருக்கல் வரையிலான (மதிப்பீடு செய்யப்பட்ட வளர்ப்புச்செலவு) | ருபா | 0.10மில்லியன் |
| இனப்பெருக்கல் வரையிலான எதிர்பார்த்த மொத்த செலவு | ரூபா | 33 மில்லியன் |
| இறக்குமதி செய்யப்பட்ட ஒரு மாட்டின் | ரூபா | 0.8 மில்லியன் |
| சேமிக்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி ஒரு கால்நடைக்கு | ரூபா | 0.47மில்லியன் |
| **சேமிக்கப்பட்ட மொத்த வெளிநாட்டுச் செலாவணி** | **ரூபா** | **10.34மில்லியன்** |
| **மொத்த சேமிப்பு** | **ரூபா** | **1935மில்லியன்** |



இலங்கையில் முதன் முறையாக உயிரணு மாற்று முறை (E.T) மூலம் போபத்தலாவ பால் பண்ணையில் 2007ம் ஆண்டு டிசம்பர் மாதம் 3ம் திகதி பிறந்த "அபபேக்சா" எனும் பசுக்கன்று.

**2010-12-31 திகதிக்கு உயிரணு மாற்றுத்திட்டத்தின் முன்னேற்றம்**

**உயிரணுக்கள்**

| | |
|---|---|
| இறக்குமதி செய்யப்பட்ட உயிரணுக்களின் எண்ணிக்கை | 20 |
| பழுதடைந்தும் காணாமல் போயுள்ளவை | 04 |
| மாற்றப்பட்ட உயிரணுக்கள் | 196 |
| **மொத்தம்** | **200** |

**சகல உயிரணுமாற்றுப் பிறப்புகளுக்கு பின்பு தற்போதைய நிலை**

| | |
|---|---|
| முதல் 28-60 நாட்களினுள் உயிரணு இறப்புக்கள் | 15 |
| கருச்சிதைவுகள் | 05 |
| பலமற்ற பிறப்புக்கள் (பிறப்பின் இறந்தவை) | 01 |
| பிறப்பின் போது இறந்தவை | 01 |
| இறப்புக்கள் | 07 |
| மொத்த இறப்பு எண்ணிக்கை | 09 |
| மொத்த பிறப்பு எண்ணிக்கை | 61 |

தற்போது உயிருடனும் ஆரோக்கியமான நிலையில் உள்ள எண்ணிக்கை 52 (பெண் 22 ஆண்30)

மொத்த வெற்றி வீதம் 39%

**3.2 ஏற்கனவெ பால் தீர்மானிக்கப்பட்ட விந்து மூலம் செயற்கைச் சினைப்படுத்தல்**

தற்சமயம் 50% சதவீதமாகவுள்ள பசுக்கன்றுகளின் பிறப்பை, எதிர்காலத்தில் 93% சதவீதமாக அதிகரிக்கவென, இலங்கையில் முதல் தடவையாக பிரிசியன், ஜேர்ஸி கால்நடைகளின் 200 தரம் உபயோகிக்கக்கூடிய ஏற்கெனவே பால் தீர்மானிக்கப்பட்ட விந்துகளை அமெரிக்காவிலிருந்து சபை இறங்குமதி செய்துள்ளது. இந்தத் திட்டத்தைப் பரீட்சார்த்த அடிப்படையில் சபை ஆரம்பிக்கவிருக்கிறது. இந்தத் திட்டம் வெற்றியடையு மானால், ஏனைய பண்ணைகளுக்கும் இது விஸ்தரக்கப்படும்.

இந்தத் திட்டத்தின் மூலம் உச்சக்கட்ட பலன்தரும் பசுக்களை பண்ணையாளர்களுக்கு அதிக எண்ணிக்கையில் வழங்க முடியுமென்றும், இதன் அடிப்படையில் உள்ளூர் பால் உற்பத்தி அதிகரிக்கும் என்றும் சபை எதிர்பார்த்துள்ளது.

பால் தீர்மானிக்கப்பட்ட விந்தின் மூலம் செயற்கைச் சினைப்படுத்தல் முதன்முறையாக இலங்கையில் பசுக்கன்று ஒன்று போவத்தலாவ பால்பண்ணையில் 2010 பெப்ரவரி மாதம் 3ம் திகதி பிறந்தது.

**பால் தீர்மானிக்கப்பட்ட விந்து செயற்கை சினைப்படுத்தல் வேலைத்திட்டத்தின் முன்னேற்றம்**

**பால் தீர்மானிக்கப்பட்ட விந்து உபயோகம்:**

- இறக்குமதி செய்த முழு எண்ணிக்கை 200
- இதுவரை பாவிக்கப்பட்ட தொகை 146 (பிரிஸியன் 76 ஜர்ஸி-70)
- மிகுதி 54 (பீரிஸியன் 24 ஜர்ஸி-30)

செயற்கை சினைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்ட கருத்தரித்துள்ள நிலையை

| | |
|---|---|
| பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட எண்ணிக்கை | = 113 |
| கருத்தரித்துள்ள மொத்த எண்ணிக்கை | = 55 |
| இன்று வரை வெற்றி வீதம் | = 55/113 X100% |
| | = 48.6% |

**பால் தீர்மானிக்கப்பட்ட விந்துகளின் நன்மைகள்**




- ❖ சாதாரணமாக 93% முறைகளகளில் பலனை (பசுகன்று என்று) முன்கூட்டியே ஊர்ஜிதம் செய்யக் கூடியவையாகுதல்
- ❖ மிகவும் குறுகிய காலத்திற்குள் இளம் பசுத் தொகையை அதிகரிக்கக்கூடிய சௌகரிய மான கருவியாகுதல்
- ❖ இளம் பசுக்களின் கன்று போடும் கஷ்டங்களை குறைத்தல்
- ❖ சிறந்த பசு மந்தை ஒன்றை சபையில் கட்டி எழுப்ப கூடிய வசதி
- ❖ மந்தையிலிருந்து அகற்றும் வீதம் குறைதல்
- ❖ குறுகிய கால எல்லைகளுள் பால் உற்பத்தி 2-3 மடங்கு அதிகரிக்கக்கூடிய வாய்ப்பு
- ❖ தரமான இனப்பெருக்கப் பொருட்களை மக்களுக்கு வழங்கும் அளவு 2-3 மடங்கு அதிகரிக்கக்கூடிய வாய்ப்பு
- ❖ ஒரு பெண் பசுவின் விலையை 50 வீதத்தால் குறையும் வாய்ப்பு
- ❖ இறைச்சிக்காக வெட்டுதலை குறைக்க கூடிய வாய்ப்பு

### 3.3 பசும்பால் பாவனை ஊக்குவிப்பு

உள்ளூர் பால் உற்பத்தியையும், பால் பாவனையையும் அதிகரிக்கும் நோக்கத்தில், பசும்பால் பாவனையை மேம்படச் செய்ய 2004 ஆம் ஆண்டில் இருந்து சபை நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது. 2006 ஆம் ஆண்டில் இந்தத் திட்டம் துரிதப்படுத்தப்பட்டு நாட்டு மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் 2006 ஆம் ஆண்டில் இருந்து 2008 ஆம் ஆண்டு வரை நாட்டின் பல பகுதிகளில் 150 பால் விற்பனை நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டன. நாளாந்த பசும்பால் விற்பனை தற்சமயம் 4500 லீற்றர்களாக அதிகரித்துள்ளது.

இவ்வேலைத் திட்டத்தின் கீழ் 150 பால் விற்பனை நிலையங்களும் 109 அனுமதி வழங்கப்பட்ட முகவர் விற்பனை கடைகளும் கொழும்பிலும் அதன் சுற்று புறங்களிலும் ஆரம்பிக்கப்பட்டன.2010 ஆம் ஆண்டினுள் இவ் வகையான பால் விற்பனை நிலையங்கள் மூலம் 0.8 மில்லியன் லீற்றர் பால் பொதுமக்களுக்கும் விற்பனை செய்யப்பட்டது. சபையின் சில பால் விற்பனை நிலையங்களின் காணப்படும் நஷ்டங்களை தவிர்க்கு முகமாக தனியார் துறையோடு கூட்டு வியாபாரம் அடிப்படையில் செயல்பட சபை ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டுள்ளது.




| | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 |
|---|---|---|---|---|---|---|
| விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை | 04 | 37 | 120 | 150 | 150 | 150 |
| முகவர் நிலையங்கள் | | | | 76 | 109 | 109 |
| பசும்பால் விற்பனை (மில்லயன் லீற்றர்) | 0.54 | 0.78 | 0.94 | 1.37 | 1.2 | 0.8 |

### 3.4 புறொயிலர் இறைச்சிக்கும் முட்டைகளுக்கும் ஏற்பட்ட பற்றாக்குறையை சமாளிப்பதற்கு மேலதிக தாய் பறவைகளே 2010 ஆம் ஆண்டில் இறக்குமதி செய்தல்

புறொயிலர் இறைச்சிக்கும் முட்டைகளுக்கும் நாட்டின் நிலவிய தட்டுப்பாட்டை நீக்கும் முகமாக கால் நடை மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சரின் பணிப்பின் பேரில் தேசிய கால் நடை வள அபிவிருத்தி சபை கோழி தாய் பறவைகளையும் வர்த்தக ஒரு நாள் வயதுடைய லேயர் குஞ்சகளையும் இறக்குமதி செய்தன. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.



ஒரு நாள் வயதுடைய கோழிக்குஞ்சுகளுக்கு நிலவிய கிராக்கியை சமாளிக்க இவ் வேலைத்திட்டத்தின் கீழ் மேலதிக 27000 ஒரு நாள் வயதுடைய தாய் புறொயிலர் கோழிக்குஞ்சுகளை நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்டன. தேசிய இறைச்சி உற்பத்திக்கு ஏதிர்பார்க்கப்பட்ட பங்களிப்பு 5% (4300 மெ.டொன்/102,000(தேசிய) மெ.டொ *100)

தேசிய இறைச்சி உற்பத்திக்கு தேசிய கால் நடை அபிவிருத்தி சபையின் பங்களிப்பு 3% (2,280 மெ.டொ/102,000 (தேசிய) மெ.டொ*100)

**மொத்த பங்களிப்பு 8.0%**

இத்திட்டத்தின் கீழ் மேதிகமாக 5000 ஒரு நாள் வயதுடைய லேயர் குஞ்சுகளையும் இறக்குமதி செய்யப்பட்டது. **தேசிய முட்டை உற்பத்திக்கு எதிர்பார்க்கப்பட்ட பங்களிப்பு 10%** (115 மில்லியன் முட்டைகள்/ 1140(தேசிய) மில்லியன் முட்டைகள் *100)

### 3.5 முட்டை பற்றாக்குறையை சமாளிப்பதற்கு வர்த்தக ஒரு நாள் வயதுடைய கோழிகுஞ்சுகளை இறக்குமதி செய்தல்

இத் திட்டத்தின் கீழ் 200,000 ஒருநாள் வயதுடைய வர்த்தக லேயர் குஞ்சுகளை நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்டன. (200,000*95%*300/கோழி=57 மில்லியன் முட்டைகள்) 125,000 குஞ்சுகளை இதுவரை இறக்குமதி செய்யப்பட்டன.

நாட்டுக்கு எதிர்பார்க்கப்பட்ட பங்களிப்பு 5%(57 மில்லியன் முட்டைகள்/1140 மில்லியன் முட்டைகள் *100)

நாட்டுக்கு முட்டை சம்பந்தப்பட்ட மொத்த பங்களிப்பு -15%(2011 ஆண்டில்)

### 3.6 கால் நடை தீனி அரைத்தல்



தேசியகால்நடை வள அபிவிருத்தி சபை கால்நடைத் தீனி அரைக்கும் நடவடிக்கைகளை கீழ் காணும் அரைக்கும் இயந்திரசாலைகளில் இந்த வருடம் ஆரம்பித்தது.

01. ரொசிடா பண்ணை
02. ஹொரகலே பண்ணை
03. மிரிஸ்வத்த பண்ணை
04. கறந்தகொல்ல பண்ணை

ஆண்டிகம பண்ணையிலும் கால்நடை தீனி அரைக்கும் வேலைகள் இவ்வருடத்திற்குள் ஆரம்பிக்கப்பட உள்ளது. தேவைக்கு அதிகம் தயாரிக்கப்படும் கால்நடை தீனிகளை எதிர்காலத்தில் ஓர் நியாயமான விலைக்கு உள்ளூர் பண்ணையாளர்களுக்கு விற்பதற்கு தேசிய கால் நடை அபிவிருத்தி சபை உத்தேசித்துள்ளது.

### 3.7 பசும்புல் விதை இறக்குமதி மற்றும் புற்தரை அபிவிருத்திட்டம்

தேசிய கால்நடை அபிவிருத்தி சபையில் உள்ள பால் பண்ணைகளில் இருக்கின்ற மேய்ப்புப் புல் போஷாக்குதன்மையில் மிகக்குறைவாக காணப்படுவதால் இதைத் தவிர்க்கு முகமாக சிறந்த போஷாக்கு நிறைந்த புல் வகைகளையும் லெகுமே விதை வகைகளும் சபை 08 வருடங்களுக்கு பின்பு இறக்குமதி செய்தது. இத்திட்டத்தின் ஊடாக 2050 கிலோ கிராம் டையிலோசன்தஸ், டெகும்பன்ஸ், கிகுயா மற்றும் வயிட் குலொவர் என்னும் பசும்புல் வகைகளை சபை இறக்குமதி செய்தது. 2010 ஆண்டில் சிறந்த கால்நடைத் தீன் விநியோகம் உட்பட சாதகமான சூழ்நிலைகள் காரணமாக பால் உற்பத்தியில் அதிகரிப்பு ஏற்படுமென தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபை நம்பிக்கை கொண்டுள்ளது.

தேசிய கால்நடை அபிவிருத்தி சபையின் பால்பண்ணைகளில் புற்தரை அபிவிருத்தி திட்டங்களில் செயலாற்றுகை பற்றிய விபரம் வருமாறு

| | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 |
|---|---|---|---|---|---|---|
| பயிரிடப்பட்ட புற்தரை (ஏக்கர்களில்) | 200 | 522 | 273 | 367 | 90 | 333 |



### 3.8 சேதனப்பசளை உற்பத்தி வேலைத்திட்டம்





முன்னைய நாட்களில் புற்தரைக்கும், தென்னந்தோட்டங்களுக்கும் உரமாக மாட்டெரு உபயோகிக் கப்பட்ட போதிலும், பெருமளவு மாட்டெரு விரையமாகியது. எனவே பண்ணை மட்டத்தில் சேதனப் பசளையைத் தயாரித்து, பெறுமதி சேர்க்கப்பட்ட பொருளாக அதனை விற்பதற்கு சபை தீர்மானித்துள்ளது.
நாட்டில் இயற்கைப் பசளையை உபயோகித்துப் பெறும் காய்கறிகள், பழ வகைகள் என்பவற்றுக்குப் பெருமளவு கிராக்கி இருப்பதனால், சேதனப் பசளையை விற்பதன் மூலம் குறிப்பிடத்தக்க வருமானத்தைப் பெற முடியும் என்று எதிர்பார்த்துள்ளது. உரத்தின் விலை அதிகரித்தமை, சேதனப்பசளைத் திட்டத்தை ஆரம்பிப்பதற்கான மற்றொரு கரணமாகும்.

விலை கூடிய உர வகைகளுக்கு மாற்றாக சேதனப்பசளை உற்பத்தியை பால் பண்ணைகளில் 2006 ஆம் ஆண்டில் இருந்து சபை ஆரம்பித்தது.

2006-2009 காலப்பகுதிக்கான உற்பத்தி விபரங்கள் வருமாறு:

| | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 |
|---|---|---|---|---|---|
| சேதனப் பசளை (மெ.தொ) | 83 | 245 | 315 | 325 | 316 |
| சேதனப் பசளை விற்பனை (மெ.தொ) | 15.5 | 16.7 | 15.9 | 14.2 | 78 |

எஞ்சியுள்ள சேதனப் பசளை தேசிய கால்நடை அபிவிருத்தி சபையின் தென்னந் தோட்டங்களில் உபகோகிக்கப்பட்டது.

### 3.9 தெங்கு செய்கை அபிவிருத்தி

பிரதான தெங்கு முக்கோண வலயத்திலும் கண்டி பிரதேசத்தின் மத்தியில் அமைந்துள்ள 14 தென்னந்தோட்டங்களில் கால் நடை அபிவிருத்தி நடவடிக்கைகளோடு கூட்டிணைக்கப்பட்டு 4373 ஹெக் நிலப்பரப்பில் தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபை தெங்கு செய்கையை நன்றாக நடத்திவருகின்றது. சபையின் சராசரி வருடாந்த தெங்கு உற்பத்தி 22 மில்லியன் காய்களாகும். இதில் பெரும் பகுதி தெங்கு அபிவிருத்தி அதிகார சபை ஏல விற்பனை நிலையம் ஊடாக விற்கப்பட்டது. குறிப்பிடத்தக்களவு கொப்பாராக்களும் மாற்றப்பட்டது.



**செளிப்பான தென்னந்தோட்டம்**



**சிறந்த தென்னை அறுவடை**

**தென்னை கீழ் நடுகைத்திட்டம் - 2008-2010 வரை (கூட்டுப்பண்ணை முறையில்)**



| | 2008 | 2009 | 2010 |
|---|---|---|---|
| **தென்னை நடுகை செய்யப்பட்ட ஏக்கர் எண்ணிக்கை** | | **87** | **199** |

**புதிய இன தென்னை மரங்களை பரீட்சார்த் முறையில் நாட்டும் திட்டம்.**

தென்னை ஆராய்ச்சி நிலையத்துடன் இணைந்து மலாயன் ரெட், டுவோப், ரெனல் ஜலன்ட் டோல், சென் ரமோன் போன்ற புதிய கலப்பு இன தென்னை இனங்களை கொண்ட வெளிக்களப் பரீட்சார்த்த தென்னைப் பயிர்ச்செய்கைகளை சபையின் பண்ணைகளில் ஆரம்பிக்கப்பட்டன.

| பண்ணை | நாட்டிய திகதி | கன்றுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| மாரந்தவில | 2008 மே | 478 |
| வெலிகம | 2008 ஜுன் | 487 |
| சிரிங்கபாத | 2008 நவம்பர் | 619 |
| பொலன்னறுவை | 2009 ஜனவரி | 522 |

## 3.10 மனிதவள அபிவிருத்தி நடவடிக்கை



சபையின் உற்பத்தித்திறணை அதிகரிக்கவென தேசிய கால் நடை வள அபிவிருத்தி சபையின் சகல சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரிகளுக்கும் தலைமைத்துவ திறமைகளை மேம்படுத்து வதற்காகன செயலமர்வொன்று 2010 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நடாத்தப்பட்டது.

**3.11 விற்பனைத்துறையின் அபிவிருத்தி**

தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபையின் தலைமைக்காரியாலயத்தில் புதிய பால் விற்பனை நிலையம் அமைத்தல்.




நுகர்வோருக்கு புத்தம்புதிய பசும்பாலை சௌகரியத்துடன் அருந்துவதற்கு சகல வசதிகள் கொண்ட பால் விற்பனை நிலையம் ஒன்று 2010ஆம் ஆண்டில் தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபையின் தலைமைக் காரியாலயத்தில் நிர்மானிக்கப்பட்டது. இந்த விற்பனை நிலையம் 2010ஆம் ஆண்டு நவம்பர் 17 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

**தலைமைக்காரியாலயத்தில் அமைந்துள்ள விற்பனை சாலைகளை புதுப்பித்தல்**








### 3.12 உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்

#### 3.12.1 தலைமைக்காரியாலயத்தை நவீனமயப்படுத்தல்

தலைமைக்காரியாலயம் உட்பட தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபையின் 30 பால் பணணைகளை நவீனமயப்படுத்தல் மற்றும் புதுப்பித்தல் சம்பந்தமான சகல வேலைகளும் இவ் வருடத்தில் பூர்த்தி செய்யப்பட்டன. தேர்ந்தெடுக்கப்பட்ட சில பால்பண்ணைகளில் காணி சுத்தப்படுத்தல் ஆகிய வேலைகளையும் இவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்டது.




அன்று 2009




இன்று 2010

#### 3.12.2 வரவேற்பு சாலையை நவீன மயப்படுத்தல் 2010



#### 3.12.3 கேற்போர் மண்டபம் நவீனமயப்படுத்தல் 2010



3.12.4 புதிதாக நிர்மானிக்கப்பட்ட தலைவரின் அறை 2010



3.12.5 புதிதாக நிர்மானிக்கப்பட்ட பிரதித்தலைவரின் அறை 2010



3.12.6 போபத்தலாவ மற்றும் டயகம பால்பண்ணைகளில் புதிதாக நிறுவப்பட்ட இரண்டு பால் கறக்கும் இயந்திரங்கள்.



**4.0 2010 ஆண்டில் சபைக்குரிய காணிகளின் விஸ்தீரணமும் கால்நடை இனங்களின் விபரமும**

| பண்ணை | பரப்பு ஹெக் | பசு மாடு | எருமை | ஆடு | செம்மறி ஆடு | முயல் | பன்றி | வர்த்தக லேயர் | வர்த்தக புறோயிலர் | லேயர் பிறீடர் | புறோயிலர் பிரீடர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| போபத்தலாவ | 1033.5 | * | | * | | | | | | | |
| டயகம | 210.2 | * | | | | | | | | | |
| றொசிட்ட | *52.7 | * | | * | | * | * | | | | |
| முகாபெரியத்தன்ன | 174.9 | * | | * | | | * | | | | |
| M.L.D.C | 29.0 | * | | | | | | | | | |
| கரந்தகொல்ல | 20.0 | | | | | | | | | | * |
| ஹரகம | 97.0 | * | * | | | * | | | | | |
| ஆண்டிகம | 466.3 | * | | | * | | | | | | |
| கல்பொக்குன | 356.3 | * | | | | | | | | | |
| கோல் வெவ | 404.5 | * | | * | | | | | | | |
| மாரந்தவில்ல | 921.6 | * | * | | | | | | | | |
| ருக்கட்டன | 406.8 | * | | | * | | | | | | |
| சிரிங்க பாத | 472.2 | * | | | | | | | | | |
| நாரங்கல | 216.2 | * | | | | | | | | | |
| மெல்சிறிபுர | 567.2 | * | * | | | | | * | * | | |
| பெலிகம | 269.2 | * | | | | | | | | | |
| வெலிகந்த | 413.8 | * | | | | | | | | | |
| கந்தகடுவ | 2266.0 | | * | | | | | | | | |
| நிக்கவரட்டிய | *730.6 | * | * | | | | | | | | |
| பொலந்தலாவ | 245.3 | * | | | | | | | | | |
| கொட்டுகச்சி | 340.0 | * | * | * | | | | | | | |
| ஓயமடுவ | 1002.7 | * | | | | | | | | | |
| பறசன் கஸ்வெவ | 622.7 | * | | | | | | | | | |
| வேலிசற | *7.0 | | * | | | | * | * | | | |
| மிறிஸ்வத்த | 17.4 | | | | | | | | | | * |
| வீரவில | 220.5 | * | * | * | | | | * | | | |
| ரீதியகம | 1510.9 | * | * | | | | | | | | |
| ஹொறக்கலே | 368.8 | * | | | * | * | * | | | | |
| பொலன்நறுவை | *1144.8 | * | * | | | | | * | | | |
| மார்ரீன் | 390.7 | | * | | | | | | | | |
| மாறவில | 6.0 | | | | | | | | | * | |
| **மொத்தம்** | **14984.8** | **25** | **11** | **6** | **3** | **3** | **4** | **4** | **1** | **1** | **2** |

**5.0 கடந்த நான்று வருடத்தினுள் பௌதீக ரீதியிலான செயலாற்றுகை**
**கால் நடை மற்றும் பயிர் உற்பத்தி** **அட்டவணை (2**

| | நடவடிக்கை | கூறு | 2007 | 2008 | 2009 | 2010 |
|---|---|---|---|---|---|---|
| **5.1** | **கால்நடை எண்ணிக்கை** | | | | | |
| | பசுமாடுகள் | எண்ணிக்கை | 8,272 | 8,199 | 8,621 | 8,329 |
| | எருமைகள் | எண்ணிக்கை | 2,114 | 2,130 | 2,191 | 2,409 |
| | **மொத்தம்** | எண்ணிக்கை | **10,386** | **10,329** | **10,812** | **10,738** |
| | ஆடுகள் | எண்ணிக்கை | 1,738 | 1,673 | 1,656 | 1,454 |
| | செம்மறி ஆடுகள் | எண்ணிக்கை | 2,222 | 2,692 | 2,956 | 3,043 |
| | பன்றிகள் (இனவிருத்தி) | எண்ணிக்கை | 1,306 | 923 | 1,514 | 975 |
| | **கோழிப்பண்ணை** | | | | | |
| | புறொயிலர் தாய் குஞ்சுகள் | எண்ணிக்கை | 26,743 | 29,904 | 25,953 | 33,838 |
| | லேயர் தாய் குஞ்சுகள் | எண்ணிக்கை | 6,053 | 5,767 | 4,998 | 9,870 |
| | வர்த்தக லேயர் | எண்ணிக்கை | 21,001 | 15,145 | 6,180 | 4,298 |
| | வர்த்தக புறோயிலர் | எண்ணிக்கை | 14,979 | 3,336 | 1,433 | 1,958 |
| | காடைகள் | | 8,349 | 6,552 | 46 | 377 |
| | முயல்கள் | எண்ணிக்கை | 1,117 | 811 | 507 | 0 |
| **5.2** | **இனவிருத்திக்கான கால்நடை வழங்கல்** | | | | | |
| | பசுமாடுகள் | எண்ணிக்கை | 1,153 | 1,200 | 1,033 | 944 |
| | எருமைகள் | எண்ணிக்கை | 265 | 174 | 128 | 210 |
| | ஆடுகள் | எண்ணிக்கை | 267 | 281 | 274 | 218 |
| | செம்மறி ஆடுகள் | எண்ணிக்கை | 194 | 367 | 312 | 123 |
| | பன்றிகள் | எண்ணிக்கை | 1,516 | 2,294 | 1,833 | 3,328 |
| | முயல்கள் | எண்ணிக்கை | 1,403 | 1,071 | 746 | 0 |
| **5.3** | **கோழிக்குஞ்சு உற்பத்தி** | எண்ணிக்கை | | | | |
| | புறொயிலர் குஞ்சுகள் (மில்லியன்) | எண்ணிக்கை | 2.08 | 2.3 | 1.8 | 1.8 |
| | லேயர் (மில்லியன்) | எண்ணிக்கை | 0.81 | 0.9 | 0.6 | 1.0 |
| **5.4** | பால் உற்பத்தி | | | | | |
| | பசும்பால் | லீற்றர் மில்லியன் | 2.9 | 3.2 | 3.3 | 3.2 |
| | எருமைப்பால் | லீற்றர் மில்லியன் | 0.65 | 0.68 | 0.64 | 0.68 |
| | ஆட்டுப்பால் | லீற்றர் மில்லியன் | 22,637 | 23,077 | 27,640 | 13,358 |
| | | | | | | |
| **5.5** | **முட்டை உற்பத்தி (மில்லியன்)** | எண்ணிக்கை | 4.1 | 3.4 | 1.9 | 1.0 |
| | காடை முட்டை | எண்ணிக்கை | 0.25 | 0.21 | 0.05 | 0.02 |
| **5.6** | **புறொயிலர் உற்பத்தி (பறவைகள்)** | மில்லியன் | 0.09 | 0.09 | 0.01 | 0.01 |
| | | மில்லியன் | | | | |
| **5.7** | **தெங்கு ஒற்பத்தி (காய்கள்)** | | | | | |
| | தெங்கு ஒற்பத்தி | மெ.தொான் | 21.73 | 20.55 | 21.48 | 20.60 |
| | கொப்பரா உற்பத்தி | மெ.தொன | 537.4 | 278.7 | 336.71 | 247.85 |

## 6.0 கால்நடை மற்றும் பயிர் உற்பத்தி பற்றிய தகவல்கள்

| **6.1** | **நடவடிக்கை** | கூறு | **2009** | **2010** |
|---|---|---|---|---|
| | கால்நடைகளின் எண்ணிக்கை | | | |
| | பசுமாடுகள் | எண்ணிக்கை | 8,621 | 8,329 |
| | எருமைகள் | எண்ணிக்கை | 2,191 | 2,409 |
| | **மொத்தம்** | | **10,812** | **10,738** |
| | ஆடுகள் | எண்ணிக்கை | 1,656 | 1,454 |
| | செம்மறி ஆடுகள் | எண்ணிக்கை | 2,956 | 3,043 |
| | பன்றிகள் (இனவிருத்தி) | எண்ணிக்கை | 1,514 | 975 |
| | முயல்கள் | எண்ணிக்கை | 507 | 0 |
| | **கோழிப்பண்ணை** | | | |
| | புறொயிலர் தாய்குஞ்சுகள் | எண்ணிக்கை | 25,953 | 33,838 |
| | லேயர் தாய் குஞ்சுகள் | எண்ணிக்கை | 4,998 | 9,870 |
| **6.2** | **இனவிருத்திக்கான கால்நடை வழங்கல்** பசுமாடுகள் | எண்ணிக்கை | 1,033 | 944 |
| | எருமைகள் | எண்ணிக்கை | 128 | 210 |
| | ஆடுகள் | எண்ணிக்கை | 274 | 218 |
| | செம்மறி ஆடுகள் | எண்ணிக்கை | 312 | 123 |
| | பன்றிகள் | எண்ணிக்கை | 1,833 | 3,328 |
| | முயல்கள் | எண்ணிக்கை | 746 | 0 |
| | **ஒரு நாள் வயதுடைய கோழிக்குஞ்சுகள்** | | | |
| | புறொயிலர் குஞ்சுகள் | எண்ணிக்கை (மில்லியன்) | 1.8 | 1.8 |
| | லேயர் குஞ்சுகள் | எண்ணிக்கை (மில்லியன்) | 0.6 | 1.0 |
| **6.3** | **பால் உற்பத்தி** பசும்பால் | லீற்றர் (மில்லியன்) | 3.3 | 3.2 |
| | எருமைப்பால | லீற்றர் (மில்லியன்) | 0.64 | 0.68 |
| **6.4** | புறொயிலர் உற்பத்தி | புறவைகளின் எண்ணிக்கை | 0.01 | 0.01 |
| **6.5** | தெங்கு உற்பத்தி காய்களின் எண்ணிக்கை | எண்ணிக்கை (மில்லியன்) | 21.5 | 20.6 |
| | கொப்பரா உற்பத்தி | மெ.தொன் | 336.7 | 247.9 |

**7.0 2010 ஆம் ஆண்டின் கால்நடை மற்றும் பயிர்ச்செய்கை சம்பந்தமான தகவல்கள்**

| நடவடிக்கை | கூறு | எண்ணிக்கை |
|---|---|---|
| பசுமாடுகள் | | |
| மொத்த எண்ணிக்கை | எண்ணிக்கை | 8,329 |
| 2வயதுக்கு மேற்பட்ட இளம்பசுக்கள் | எண்ணிக்கை | 1,550 |
| 0-2 வயதுக்குட்பட்ட இளம் பசுக்கள் | எண்ணிக்கை | 2,084 |
| ஒரு வயதுக்குக் குறைந்த காளை கன்றுகள் | எண்ணிக்கை | 957 |
| மொத்த பிறப்புகள் | எண்ணிக்கை | 2,613 |
| இனவிருத்திக்கான மொத்த வழங்கல் | எண்ணிக்கை | 944 |
| மொத்த விலக்கல்கள் | எண்ணிக்கை | 932 |
| மொத்த இறப்புகள் | எண்ணிக்கை | 631 |
| பசுக்களின் மொத்த எண்ணிக்கை | எண்ணிக்கை | 3,430 |
| பால்தரும் பசுக்களின் மொத்த எண்ணிக்கை | எண்ணிக்கை | 1,519 |
| பாலில் உள்ள பசுக்களின் % சதவீதம் | % | 57 |
| சராசரி உற்பத்தி / பால்பசு நாளாந்தம் | லீற்றர் | 5.8 |
| பால்தரும் சராசரி காலம் | நாட்கள் | 265 |
| பால் உற்பத்தி | லீற்றர்(மில்லியன்) | 3.2 |
| முதல் பிரசவ சராசரி வயது | மாதங்கள் | 34 |
| பிரசவ சராசரி இடை காலம் | நாட்கள் | 363 |
| செயற்கை சினையூட்டப்பட்ட விலங்குகளின் எண்ணிக்கை | எண்ணிக்கை | 3,471 |
| எருமைகள் | | |
| மொத்த எருமைகளின் எண்ணிக்கை | எண்ணிக்கை | 2,409 |
| 2 வயதுக்குக் கூடிய எருமைகள் இளம் பெண் எருமைகள் | எண்ணிக்கை | 611 |
| 0-2 வயதுக்குட்பட்ட இளம் பெண் எருமைகள் | எண்ணிக்கை | 481 |
| காளைக் கன்றுகளின் எண்ணிக்கை | எண்ணிக்கை | 202 |
| மொத்த பிறப்புக்கள் | எண்ணிக்கை | 642 |
| இனவிருத்தி மொத்த வழங்கல் | எண்ணிக்கை | 211 |
| மொத்த விலக்கல்கள் | எண்ணிக்கை | 219 |
| மொத்த இறப்புக்கள் | எண்ணிக்கை | 207 |
| பசுக்களின் எண்ணிக்கை | எண்ணிக்கை | 925 |
| பால்தரும் பசுக்களின் எண்ணிக்கை | எண்ணிக்கை | 442 |
| பால் தரும் பசுக்களின் % சதவீதம் | % | 45 |
| சராசரி உற்பத்தி பசு நாளாந்தம் | லீற்றர் | 6.0 |
| பால் தரும் காலம் | நாட்கள் | 254 |
| பால் உற்பத்தி | லீற்றர் (மில்லியன்) | 0.68 |
| 1வது பிரசவ சராசரி வயது | மாதங்கள் | 52 |
| பிரசவ சராசரி இடைக்காலம் | நாட்கள் | 511 |
| செயற்கை சினையூட்டப்பட்ட விலங்குகளின் எண்ணிக்கை | எண்ணிக்கை | 45 |

**கோழிப்பண்ணைகள்**

| | | |
|---|---|---|
| **புறொயிலர் தாய் குஞ்சுகள்** | | |
| மொத்த எண்ணிக்கை | எண்ணிக்கை | 33,838 |
| பறவைகளின் இறக்குமதி | எண்ணிக்கை | |
| சேவல்கள்<br>பேடுகள் | எண்ணிக்கை<br>எண்ணிக்கை | 7,609<br>19,116 |
| மொத்த முட்டை உற்பத்தி | எண்ணிக்கை | 2,496,626 |
| குஞ்சுபொரிக்கக்கூடிய எண்ணிக்கை | எண்ணிக்கை | 2,332,740 |
| குஞ்சுபொரிக்கும் தன்மையின் சதவீதம் | % | 76 |
| கோழிக்குஞ்சு மொத்த உற்பத்தி | எண்ணிக்கை | 1,768,333 |
| லேயர் தாய்ப்பறவைகள் | | |
| மொத்த எண்ணிக்கை | எண்ணிக்கை | 9,870 |
| பறவைகளின் இறக்குமதி | | |
| சேவல்கள்<br>பேடுகள் | எண்ணிக்கை<br>எண்ணிக்கை | 1,380<br>11,492 |
| மொத்த முட்டை உற்பத்தி | எண்ணிக்கை | 1,575,334 |
| குஞ்சுபொரிக்கக்கூடிய முட்டைகளின் எண்ணிக்கை | எண்ணிக்கை | 1,417,274 |
| குஞ்பொரிக்கும் தன்மையின் சதவீதம் | % | 75 |
| கோழிக்குஞ்சு மொத்த உற்பத்தி | எண்ணிக்கை | 956,338 |
| **வர்த்தக புறொயிலர் உற்பத்தி** | | |
| மொத்த எண்ணிக்கை | எண்ணிக்கை | 1,958 |
| புறொயிலர் உற்பத்தி | பறவைகள் | 7,114 |
| **வர்த்தக முட்டை உற்பத்தி** | | |
| மொத்த எண்ணிக்கை | எண்ணிக்கை | 4,298 |
| பேடுகளின் மொத்த எண்ணிக்கை | எண்ணிக்கை | 6,466 |
| முட்டை உற்பத்தி | மில்லியன் | 1,118,710 |
| **பன்றிகளின் செயற்பாடு (இனவிருத்தி)** | | |
| மொத்த எண்ணிக்கை | எண்ணிக்கை | 975 |
| பிறந்த பன்றிக்குட்டிகள் | எண்ணிக்கை | 3,228 |
| சராசரி பருமன் - பெண் பன்றி | எண்ணிக்கை | 9 |
| சுராசரி பருமன் ஆண் பன்றி | எண்ணிக்கை | 8 |
| இறந்த பன்றி குட்டிகளின் எண்ணிக்கை | எண்ணிக்கை | 294 |
| **ஆடுகளின் செயற்பாடு** | | |
| மொத்த எண்ணிகை | எண்ணிக்கை | 1,454 |
| பிறந்த ஆடு குட்டிகள் | எண்ணிக்கை | 642 |
| ஆடு குட்டிபோடு விகிதம் | எண்ணிக்கை | 0.78 |
| இறப்புக்களின் எண்ணிக்கை(குட்டிகளும் வளர்ந்ததும்) | எண்ணிக்கை | 191 |
| இனவிருத்திக்கான வழங்கல் | எண்ணிக்கை | 218 |
| **செம்மறி ஆடுகளின் செயற்பாடுகள்** | | |
| மொத்த எண்ணிக்கை | எண்ணிக்கை | 3,043 |
| பிறந்த குட்டிகள் | எண்ணிக்கை | 1,434 |
| குட்டிபோடும் விகிதம் | எண்ணிக்கை | 0.75 |
| இறப்பு எண்ணிக்கை (வயது வந்ததும் குட்டிகளும்) | எண்ணிக்கை | 188 |
| இனவிருத்திக்காக வழங்கிய எண்ணிக்கை | எண்ணிக்கை | 123 |
| **விவசாயிகளுக்கான பயிற்சித்திட்டங்களின் செயலாற்றுகை** | | |
| பாட நெறிகளின் எண்ணிகை | எண்ணிக்கை | 108 |
| பங்பற்றியோரின் எண்ணிக்கை | எண்ணிக்கை | 3,597 |
| **தெங்கு உற்பத்தி** | | |
| உற்பத்தி செய்யப்பட்ட தேங்காய்கள் | எண்ணிக்கை | 20,602,480 |
| கொப்பரா உற்பத்தி | மெற்றிக் தொன் | 247.85 |

**8.0 தேசிய கால்நடை வள அபிவிருத்திச்சபையின் ஊழியர் நிலைமை**

2010 ஆம் ஆண்டில் தேசிய கால் நடை வள அபிவிருத்தி சபையில் மொத்தம் 2571 ஊழியர்கள் சேவையாற்றினார்கள் இதன் விபரம் வருமாறு:

| பிரிவு | 2009 | 2010 |
|---|---|---|
| நிறைவேற்றுத்தரம் | 72 | 62 |
| லீலிதர் மற்றும் இணைந்த தரம் | 436 | 408 |
| சிற்ருளியர் மற்றும் இணைந்த தரம் | 74 | 83 |
| பதிவேட்டுத் தொழிலாளர்களும் பயிற்சி பெறுவேரும் | 1989 | 1917 |
| மொத்தம் | **2571** | **2470** |

**2010ஆம் ஆண்டில் கீழ்காணும் புதிய ஆட்சேர்ப்புக்களை சபை மேற்கொண்டிருந்தது.**

| தரம் | புதவிநிலை | எண்ணிக்கை |
|---|---|---|
| | பதிவேட்டு லிகிதர் | 7 |
| | பயிற்சி பெறும் லிகிதர் | 3 |
| | பதிவேட்டு விற்பனை உதவியாளர்கள் | 07 |
| | சாரதி (ஒப்பந்த அடிப்படையில்) | 1 |
| | பதிவேட்டுத் தொழிலாளர்கள் | 38 |
| | மொத்தம் | **56** |

**2010ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட பதவி உயர்வுகள்**

| | தரம் | புதவி நிலை | எண்ணிகை |
|---|---|---|---|
| 1 | IV | முகாமையாளர் | 2 |
| | மொத்தம் | மொத்தம் | **2** |

**2010 ஆம் ஆண்டில் கீழ்காணும் ஓய்வில் செல்கைகளும் பதவி விலகல்களும் இடம்பெற்றுள்ளன.**

| | தரம் | பதவி நிலை | எண்ணிகை |
|---|---|---|---|
| 1 | III | உதவி பொது முகாமையாளர் | 1 |
| | IV | முகாமையாளர் (விற்பனை) | 1 |
| | IV | முகாமையாளர் | 1 |
| 3 | VI | உதவி முகாமையாளர் | 1 |
| 4 | | கிளார்க் | 9 |
| 6 | | வெளிக்கள உத்தியோகத்தர்கள் | 5 |
| 11 | | சாரதிகள் | 3 |
| | மொத்தம் | மொத்தம் | **21** |

## 9.0 தேசிய கால்நடை அபிவிருத்தி வள சபையின் 2010 ஆண்டின் பௌதிக ரீதியிலான முன்னேற்றம்.

### 9.1 கால் நடை சம்பந்தப்பட்ட நடவடிக்கைகள்

### 9.1.1 பசுமாடு

#### 9.1.1.1 கால் நடை மந்தை

2010 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியளவில் வருடாந்த இலக்கு 7315 ஆக இருந்த அதே சமயத்தில், கால்நடை மந்தையில் 8329 கால் நடைகளே இருந்தன. இது வருடாந்த இலக்கோடு ஒப்பிடும்போது ஒரு குறிப்பிடத்தக்க சாதனையாகும். இதற்கு பிரதானமாக இன விருத்திக்குத் தகுதியற்ற மாடுகளும் சினைக்காக இருக்கின்ற மாடுகளுமே காரணமாகின. கால்நடை மந்தையில் 1519 பால் தரும் பசுக்களுடன் மொத்தம் 3430 பசுக்கள் அடங் கியிருந்தன.3634 இளம்பசுக்களும் கால்நடை மந்தையில் அடங்குகின்றன. கடந்த வருடத்தோடு ஒப்பிடுகையில், மந்தையின் எண்ணிக்கை குறைவாகவே காணப்படுகின்றது. இதற்கு அதிக இறப்புகளும் இறந்த பிறப்புகளுமே காரணமாகின. எவ்வாறாயினும், நிலைமை தற்போது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.




பசுமாடு மந்தை

#### 9.1.1.2 பால் உற்பத்தி

ஆய்வுக்குட்பட்ட வருடத்தின் பால் உற்பத்திக்கான இலக்கு 4.0 மில்லியன் லீற்றர்களாகும். அதேசமயத்தில் 3.2 மில்லியன் லீற்றர் பால் உற்பத்தி செய்யப்பட்டுள் ளது. இது குறிப்பிட்ட இலக்கின் 80% சதவீதமாகும். சென்ற வருட பால் உற்பத்தியுடன் ஒப்பிடுகையில், பால் உற்பத்தி கிட்டத்தட்ட அதே அளவில் இருக்கின்றது.




பசும்பால் உற்பத்தி (லீற்றர் மில்லியன்)

**9.1.1.3 பிறப்புகளும் இறப்புகளும்**

வருடாந்த பிறப்பு இலக்கு 2902 கன்றுகள் எனக் குறிப்பிட்டிருந்த போதிலும் 2613 பிறப்புகளே இடம்பெற்றன. கடந்த வருடத்தினுடன் ஒப்பிடுகையில் பிறப்புகள் 48 கன்றுகளால் அதிகரித்துள்ளது.

பசுமாடுகளின் இறப்பு விகிதம் சென்ற வருடம் 6.5% சதமாக இருந்த அதே சமயத்தில் இந்த வருடம் 7.5% மாக அதிகரித்துள்ளது.




பசு பிறப்புகள்




பசு இறப்பு

**9.1.1.4 இனவிருத்திக்கென வழங்கல்கள்**

இனவிருத்திக்கென ஆய்வுக்குட்பட்ட ஆண்டில் 717 இளம் பசுக்களும் 646 காளைகளும் பொதுமக்களுக்கு வழங்கப்படுமென இலக்கு நிர்ணயித்திருந்த போதிலும் முறையே 482 இளம் பசுக்களும் 642 காளைகளும் வழங்கப்பட்டது. இந்த வருடம் இனவிருத்திக்கென காளைகளுக்கு மிகவும் குறைந்தளவிலான கிராக்கியே காணப்பட்டது.




*இனவிருத்திக்கென பசு மாடுகளை வழங்கல்*

## 9.1.2 எருமை

### 9.1.2.1 எருமை மந்தை

2010 டிசம்பர் இறுதியளவில் எருமைகளின் எண்ணிக்கை 2191 ஆக இருக்கவேண்டும் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த அதே சமயத்தில் 2409 எருமைகள் பண்ணையில் இருந்தன. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், எருமைகளின் எண்ணிக்கையில் 218 எருமைகளால் அதிகரிக்கப்பட்டுள்ளது. 442 பால் தரும் எருமைகள் உட்பட 925 பெண் எருமைகளும் 1092 இளம் பெண் எருமைகளும் மந்தையில் அடங்கும்.




### 9.1.2.2 பால் உற்பத்தி

ஆய்வுக்குட்பட்ட வருடத்துட 0.81 மில்லியன் லீற்றர் பால் உற்பத்தி செய்யவேண்டும் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும் 0.68மில்லியன் லீற்றர் பால் உற்பத்தி செய்யப்பட்டது. சென்ற வருடத்தின் உடன் ஒப்பிடுகையில்,எருமைப்பால் உற்பத்தி 11 சதவீதத்தால் அதிகரிக் கப்பட்டுள்ளது.



### 9.1.2.3 பிறப்புகளும் இறப்புகளும்

ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் பிறப்புகளுக்கான இலக்கு 645 ஆகக் குறிப்பிட்டிருந்த போதிலும் 642 பிறப்புகளே இடம்பெற்றன. இலக்குடன் ஒப்பிடுகையில், இது 99.5% சதவீத சாதனையாகும். கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் எருமைகளின் மொத்தப்பிறப்பு 13% சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

இவ் வருடத்தில் மொத்த இறப்பு வீதம், கடந்த வருட இறப்பு வீதமான 11% சதவீதத்தில் இருந்து 9% சதவீதமாக குறைந்துள்ளது.




எருமைகளின் பிறப்புகள்




எருமைகளின் பிறப்புகள்

### 9.1.2.4 இனவிருத்திக்காக எருமைகளை வழங்கல்

சபையின் நிர்வாகத்திற்கு உட்பட்ட பண்ணைகளில் உச்சகட்ட எண்ணிக்கையான எருமைகளை பராமரிக்கும் நோக்கத்தில் 2009ஆம் ஆண்டில் பெண் எருமைகளின் வழங்கல்கள் மட்டுப்படுத்தப்பட்டன. ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் 80 இளம் பெண் எருமைகள் 150 ஆண் எருமைகளும் இனவிருத்திக்கென பொதுமக்களுக்கு வழங்கப்படும் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும் முறையே 54 பெண் எருமைகளும் 156 ஆண் எருமைகளும் வழங்கப்பட்டுள்ளன.




னவிருத்திக்கென எருமைகளை வழங்குதல்

### 9.1.3 கோழிப்பண்ணை

#### 9.1.3.1 கோழிகள் இனவிருத்தி

**புறொயிலர் கோழிக்குஞ்சு உற்பத்தி**

ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் புறொயிலர் கோழிக்குஞ்சு உற்பத்தி 2.0 மில்லியனாக இலக்கு நிர்ணயிக்கப்பட்ட போதிலும், 1.8 மில்லியன் உற்பத்தி செய்யப்பட்டது. இது 90% சதவீத பெறு பேற்றை காண்பிக்கிறது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் புறொயிலர் கோழிக்குஞ்சு உற்பத்தி கிட்டத்தட்ட அதே அளவில் இருப்பதை காணக்கூடியதாக இருக்கின்றது.




புறொயிலர் கோழிக்குஞ்சு உற்பத்தி

**லேயர் கோழிக்குஞ்சு உற்பத்தி**

தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபை மாறவில என்ற இடத்தில் மாத்திரம் ஒரேயொரு லேயர் இனவிருத்திப் பண்ணையை நடத்தி வருகிறது. இந்தப் பண்ணையில் "ஷேவர" 579 சேவல் மற்றும் பேட்டுக் கோழிகள் வளர்க்கப்படுகின்றன. ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் லேயர் கோழிக்குஞ்சு உற்பத்தி 0.75 மில்லியன் ஆக இலக்கு நிர்ணயிக்கப்பட்ட போதிலும், 1.0 மில்லியன் கோழிக்குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டன. இந்தப் பெறுபேறு 127% சதவீதமாகும். கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில்,லேயர் கோழிக்குஞ்சு உற்பத்தி 70% சதவீதம் அதிகரிப்பு காணப்படுகிறது. இதற்கு முக்கிய காரணம் 2009 ஆண்டில் லேயர் தாய் கோழிக்குஞ்சுகளை இறக்குமதி செய்தவையாகும்.




லேயர் கோழிக்குஞ்சு உற்பத்தி

### 9.1.3.2 வர்த்தக அடிப்படையிலான கோழிப்பண்ணை

#### வர்த்தக அடிப்படையில் முட்டை உற்பத்தி

2010 ஆம் ஆண்டில் 1.1 மில்லியன் முட்டைகள் உற்பத்தி செய்யப்பட்டதை அடுத்து 110% சதவீத பெறுபேறு முட்டை உற்பத்தி சம்பந்தமாகப் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இந்த வருடத்திற்கான முட்டை உற்பத்தியின் இலக்கு 1.0மில்லியன்களாகும்.




வர்த்தக அடிப்படையில் முட்டை உற்பத்தி

#### வர்த்தக அடிப்படையிலான புறொயிலர் உற்பத்தி

2010 ஆம் ஆண்டில் வருடாந்த புறொயிலர் உற்பத்தி 7114 பறவைகளாக இருந்த அதேசமயத்தில், வருடாந்த புறொயிலர் உற்பத்தி இலக்கு 11400 கோழிகளாக இருந்தன. உற்பத்தி செலவின் அதிகரிப்பே இதற்கான காரணமாகும்.




வர்த்தக அடிப்படையில் முட்டை உற்பத்தி

**9.1.4 பன்றிகள்**

சபையின் பண்ணைகளில் பெண் பன்றிகளின் எண்ணிக்கை 214 என இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும் 202 பெண் பன்றிகளே இருந்தன. பன்றி வளர்ப்புத் தொழில் சம்பந்தமாக கோரிக்கைகள் அதிகரித்தபடியால் 2010ம் ஆண்டில் பன்றிகளின் இனவிருத்தி எண்ணிக்கைகளும் அதிகரித்தன.

பன்றிகளின் பிரசவ விகிதத்திற்கு 2.1 என இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும் 1.8 வீதம் பெற்றுக்கொள்ளப்பட்டது.




**9.1.4.1 இனவிருத்திக்காக பன்றிக்குட்டிகளை வழங்கல்**

இந்த வருடத்தில் 3531 பன்றிக் குட்டிகள் இனவிருத்திக்கென வழங்கப்படவேண்டும் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும் 3328 பன்றிக்குட்டிகளே வழங்கப்பட்டன. இது 94% சதவீதம் முன்னேற்றத்தை காட்டுகிறது. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இனவிருத்திக்காக வழங்கப்பட்ட பன்றிக்குட்டிகளின் எண்ணிக்கை இவ் வருடத்தில் 52 சதவீதமான அதிகரித்துள்ளது.



### 9.1.5 ஆடுகள்

சென்ற வருடத்தில் 1656 ஆடுகள் இருந்த போதிலும், ஆய்வுக்குட்பட்ட இந்த வருடத்தில் 1454 ஆடுகளே இருந்தன. மஹாபெரியதென்ன பண்ணையில் பிறப்பு விகிதம் குறைந்திருந்ததும், புதிய ஆடுகள் சேர்க்கப்படாமையும் அதிக எண்ணிக்கையான ஆடுகள் மந்தையிலிருந்து அகற்றப்பட்டமையே இதற்கான காரணங்களாகும். பெண் ஆடுகளின் எண்ணிக்கை 863 என இலக்கு குறிக்கப்பட்ட போதிலும் டிசம்பர் மாத இறுதியளவில் இவற்றின் எண்ணிக்கை 582ஆக இருந்தது.




ஆடு மந்தைகள்

### 9.1.5.1 இனவிருத்திக்கான ஆடு வழங்கல்கள்

2010 ஆம் ஆண்டில் 292 ஆடுகள் வழங்கப்பட வேண்டும் என இலக்கு நிர்ணயிக்கப் பட்டிருந்த போதிலும், 218 ஆடுகளே வழங்கப்பட்டன. ஆடு வளர்ப்புப் பண்ணைகளில் பிறப்பு விகிதம் குறைந்திருந்தமையே இதற்கான காரணமாகும்.




இனவிருத்திக்காக ஆடு வழங்கல்

### 9.1.5.2 ஆட்டுப்பால் உற்பத்தி

போத்தலாவ மற்றும் மகாபெரியத்தென்ன பண்ணைகள் ஆட்டுப்பால் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன. இவற்றின் பால் உற்பத்தி 30686 லீற்றர்கள் என இலக்கு நிர்ணயிக்கப் பட்டிருந்த போதிலும் 13358 லீற்றர் ஆட்டுப்பாலே உற்பத்தி செய்யப்பட்டது. மகாபெரியத் தென்ன பண்ணையில் பிறப்பு விகிதம் குறைந்திருந்தமையே இதற்கான காரணமாகும்.




ஆடுப்பால் உற்பத்தி (லீ.மி)

### 9.1.6 செம்மறி ஆடு

2010 டிசம்பர் மாத இறுதியளவில் 2,671 ஆடுகள் பராமரிக்கப்பட வேண்டுமென இலக்கு நிர்ணயிக்கப்பட்ட போதிலும், 3043 செம்மறி ஆடுகள் வளர்க்கப்பட்டன. 1278 பெண் செம்மறியாடுகள் இருக்கவேண்டும் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும் அங்கிருந்த பெண் செம்மறி ஆடுகளின் எண்ணிக்கை 1389 ஆகும்.




செம்மறி ஆட்டு மந்தை அளவு

### 9.1.6.1 செம்மறி ஆடுகளின் பிறப்புகள்

2010 ஆம் ஆண்டில் செம்மறி ஆட்டுக் குட்டிகளின் பிறப்பு 1420 என இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும், 1314 ஆட்டுக் குட்டிகள் பெற்றுக்கொள்ளப்பட்டன. இது 93 சதவீத பெறுபேற்றை காண்பிக்கிறது.




செம்மறி ஆட்டுகளின் பிறப்பு

### 9.1.6.2 இனவிருத்திக்கான செம்மறி ஆடு வழங்கல்கள்

ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் 596 செம்மறியாடுகள் இன விருத்திக்கென பொது மக்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும்,123 செம்மறி ஆடுகளே வழங்கப்பட்டன. தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபையின் பண்ணைகளில் இனவிருத்திக்கான செம்மறி ஆடுகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்கத்தில் பெண் ஆடுகளின் விற்பனை கட்டுப்படுத்தப்பட வேண்டும் என சபை தீர்மானித்ததே இதற்கான காரணமாகும்.




னவிருத்திக்கான செம்மறி ஆடுகளின் வழங்கல்

### 9.1.7 விவசாயிகளுக்கான பயிற்சித்திட்டம்

திகனவிலுள்ள மிட்கன்றி கால்நடை அபிவிருத்தி நிலையத்தில் 2010 ஆம் ஆண்டில் 106 பயிற்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும், 108 பயிற்சிகள் வழங்கப்பட்டன. இந்தக் காலப்பகுதியில் 3816 விவசாயிகளுக்கு பயிற்சி அளப்படவேண்டும் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும் 3597 விவசாயிகள் பயிற்சி பெற்றனர். கடந்தவருடத்துடன் ஒப்பிடுகையில் முக்னேற்றம் குறைவாகவே காணப்பட்டது. என்னவெறால் 3 நாள் தங்கி நின்று பயிலும் பயிற்சித்திட்டங்களுக்கு நிலவிய மிகவும் குறைந்த கோரிக்கைகளாகும். சில நிறுவனங்கள் பயிற்சி நெறிகளை முன்கூட்டியே ஏற்பாடுசெய்து விட்டு பிறகு நிதி ஒதுக்கீடுகள் பற்றாக்குறையாக இருந்த படியால் பயிற்சி நெறிகளுக்கு கலந்துகொள்ளாமல் இருந்தமையும் குறிப்பிடவேண்டும்.




னவிருத்திக்கான செம்மறி ஆடுகளின் வழங்கல்

## 9.2 தெங்குச் செய்கை செயலாற்றுகை

### 9.2.1 தேங்காய் உற்பத்தி

தேசிய கால்நடை அபிவிருத்தி செய்கையின் வருடாந்த சராசரி தேங்காய் உற்பத்தி 20 தொடக்கம் 22மில்லியன் தேங்காய்களாகும். இதற்கான காரணம். 60% சதவீதமான தென்னை மரங்கள் முதிர்ச்சியடைந்துள்ளமையேயாகும். இதனைக்கருத்திற் கொண்டு ஒவ்வொரு வருடமும் 300 தொடக்கம் 400 ஏக்கர் தென்னந்தோட்டங்களில் மீள் நடுகையை சபை மேற்கொண்டுள்ளது. தேங்காய்களுக்கு நல்லவிலை கிடைப்பதனால் கொப்பறா உற்பத்தியும் வீழ்ச்சியடைந்துள்ளது.

2010 ஆம் ஆண்டுக்கான உற்பத்தி இலக்கு என 22.6 மில்லியன் தேங்காய்கள் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 20.6 மில்லியன் தேங்காய்களை தேசிய கால்நடை அபிவிருத்தி சபை பெற்றுள்ளது. இது 91% சதவீத பெறுபேறாகும்.




தெங்கு உற்பத்தி

**10 நிதியறிக்கை**

2009 ஆண்டு பெற்றுக்கொள்ளப்பட்ட 24.56 மில்லியன் ரூபா இலாபத்துடன் ஒப்பிடுகையில், தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபை 2010 ஆம் ஆண்டில் 176.4 மில்லியன் ரூபா தேறிய இலாபத்தைப் பெற்றிருந்தது. தெங்கு உற்பத்தி அதிகரிப்பு, பசும்பால் விற்பனை, கால்நடை பெறுமதி மதிப்பீடு, சிறந்த நிதிமுகாமைத்துவம் என்பவனவே இந்த அதிகரிப்புக்கான காரணங்களாகும். ஒன்றிணைக்கப்பட்ட இலாப நட்டக்கணக்கும், ஐந்தொகையும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

**மொத்த வருமானம்**

ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் சபை பெற்றுக்கொண்ட மொத்த வருமானம் ரூபா 1,099722,297 ஆகும். இதற்கு முந்திய வருடத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட தொகை ரூ889,769026

**ஒதுக்கீடுகள்**

2009.12.31 ஆம் திகதியன்று இருந்த மூலதன ஒதுக்கீடுத் தொகை ரூபா 131,884,428 ஆகும். இதேவேளை, 2009-12-31 இல் இருந்து தொகை ரூபா 132,599,971

**விவசாயிகள் நம்பிக்கை நிதியக் கடன்**

நிலுவையாகவுள்ள தொகை ரூபா 102,600,000 ஆகும்.

**11. பொது**

ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் சகல நடவடிக்கைகளிலும் உற்பத்தித்திறணை உச்சக்கட்டத்திற்கு அதிகரிக்க சகலவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.முன்னைய வருடத்திதைப் போல தெங்குப்பொருள் உற்பத்தி அதிகரிப்பு. பசும்பால் வருமான அதிகரிப்பு, இனவிருத்திக்கான கால்நடை வழங்கல் அதிகரிப்பு, தேங்காய்க்குப் பெற்ற சிறந்த விலை என்பன காரணமாக சபையின் நிதி நிலைமை திருப்பதிகரமாக இருந்தது. செலவினங்களை கட்டுப்படுத்தலும் சபையின் நிதி நிலைமையை மேலும் திருப்திகரமான நிலைமைக்கு கொண்டுவர உதவியது. ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் மேலும் விஸ்தரிக்கப்பட்ட பசும்பால் விநியோகத்திட்ட நடவடிக்கைகள் பாலுக்கு சிறந்த விலையைப் பெற்றுத்தந்தது மாத்திரமல்லாமல் சபையின் வருமானத்தின் கணிசமான அதிரிப்புக்கும் காரணமாக இருந்தது.

**12. கட்டுப்பாடுகள்**

சுபையின் பண்ணைகளில் ஒன்றிணைந்த அடிப்படையிலேயே விவசாய மற்றும் கால்நடை வள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. கால்நடைகளுக்கான புல் தரைகளும் மட்டுப்பட்டிருந்தன. இவற்றின் காரணமாக தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபையின் உச்சக்கட்ட உற்பத்தித்திறணை அடைவதற்கான எதிர்மறை விளைவுகள் ஏற்பட்டன. சபையில் உள்ள கால் நடைகளின் உயிரியல் மட்டமும் பால் உற்பத்தியை பெரிதும் பாதித்தது

ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் கால்நடைத்தீன், அதற்கான மூலப்பொருட்கள் என்பவற்றின் விலைகள் அதிகரித்ததும் சம்பளம் எரிபொருள்,மின்சக்தி என்பவற்றின் விலைகள் அதிகரித்ததும் உற்பத்திச்

செலவினத்தின் அதிகரிப்புக்கு காரணிகளாக அமைந்தன. வருடாந்த நிதி மதிப்பீடுகளில் உத்தேச நிதி ஏற்பாடுகளிலும் பார்க்க இவை அதிகரித்திருந்தன.

**நன்றியுரை**

ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் சபையின் நடவடிக்கைகளை சுபீட்சத்தை நோக்கி வழிநடத்துவதற்கு பொருத்தமான ஊக்கத்தையும், வழிகாட்டல்களையும் வழங்கியமைக்காக கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சர் கௌரவ ஆறுமுகம் தொண்டமான் ,கால்நடை வள அபிவிருத்தி பிரதியமைச்சர் கௌரவ எச்.ஆர்.மிதிரபால ஆகியோருக்கு பணிப்பாளர் சபையினர் தங்களது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றனர். சபையின் முன்னேற்றத் துக்கென விசுவாசமான, அர்ப்பணித்த சேவையை வழங்கியமைக்கென தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபையியின் பலதரப்பட்ட மட்டங்களிலுமுள்ள சகல ஊழியர்களுக்கும் சபை அதன் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது.

விலங்கினப் பாதுகாப்பு மற்றும் சுகாதார திணைக்களம், விவசாயத் திணைக்களம் போன்ற நிறுவனங்களும், கால்நடை வள அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் ஏனைய அதிகாரிகள் மற்றும் ஊழியர்களும், பேராதனை பல்கலைக்கழகம், ஏனைய வரைபு முகவர் நிறுவனங்களும் வழங்கிய பெறுமதிமிக்க உதவிகளுக்கும் ஒத்துழைப்பிற்கும் சபை அதன் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது.

# நிதி அறிக்கை


கணக்காயு அறிக்கை 177

இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான அறிக்கை 192

இல் இறுதி ஐந்தொகை 193

இல் காசுப்பாய்ச்சல் அறிக்கை 194

உடன் முடிவடைந்த ஆண்டில் பங்குகளின் மாற்ற அறிக்கை 195

கூட்டிணைப்புத் தகவல்கள் 196

ஏஎப்/டி/என்எல்டீபீ/எப்ஏ/2010 2011 செப்தெம்பர் 21

தலைவர்,
தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபை

**தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபையின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2) (சீ) பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபையின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1972 இன் 11 ஆம் இலக்க அரச கமத்தொழில் கூட்டுத்தாபனங்கள் அதிகாரச்சட்டத்தின் 23 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. நிதிஅதிகாரச் சட்டத்தின் 14(2) (சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ் அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7) (ஏ) பிரிவின் பிரகாரம் விபரமான அறிக்கை 2011 செப்தெம்பர் 14 ஆம் திகதி சபையின் தலைவருக்கு வழங்கப்பட்டிருந்தது.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்புகள்

---

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டு நியாயமாக சமர்ப்பிக்கப்படுவது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய போதிய தவறான கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவது மற்றும் நியாயமாகச் சமாப்பிக்கப்படுவதற்கு உரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை திட்டமிடல், அமுலாக்கல் மற்றும் செயற்படுத்தல், பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவுசெய்து பிரயோகித்தல், சந்தர்ப்பங்களுக்கு உகந்த வகையில் நியாயமாக கணக்கீட்டு மதிப்பீடுகளைத் தயாரித்தலும் இப் பொறுப்பில் உள்ளடங்குகின்றது.

## 1.3 கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வினதும், கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளின் போதியளவு செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும், நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைக்கப் பெற்ற பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமானளவு விரிவானதொரு கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்பாட்டைப் பெற்றுக் கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்கள், முறைகள், நடைமுறைகள் என்பவற்றிற்கமைய மேற்கொள்ளப்பட்டிருந்தது. நிதிக் கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் ஆதாரப்படுத் தத்தக்க சான்றுகளைப் பரிசீலித்தல், நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தலில் முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளையும் மதிப்பாய்வு செய்தல், அவற்றின் ஒட்டு மொத்தமான வெளிப்படுத்தல்களின் மதிப்பீடு என்பவற்றினைக் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கத்திற்காக அவசியமானதென எனது சிறந்த அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டேன் என்றும் எனது அபிப்பிராயத்திற்கு நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியுள்ளதென்றும் நான் நம்புகின்றேன். 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தற்றுணிபு அதிகாரத்தை வழங்குகின்றன.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக் கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபையின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்குப் பதிவேடுகள் முறையாகப் பேணப்பட்டிருந்தன எனவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் நிதிக்கூற்றுக்களில் விளையும் தாக்கங்களைத் தவிர தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபையின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாடுகளின் நிதிசார் விளைவுகளையும் காசுப்பாய்ச்சலையும் உண்மையாகவும் நேர்மையாகவும் காட்டும் வண்ணம் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

இலங்கை கணக்கீட்டு நியம இல. 03 இன் பிரகாரம், நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பொறுப்பை ஏற்பதாக ஓர் கூற்று கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) வெளிநாட்டுப் போக்குவரத்துச் செலவினத் தொகையான ரூபா 1,796.450 இற்கு உரித்தான செலவினங்கள் கணக்குகளில் காண்பிக்கப்படாது விரிவுரைகள் மற்றும் கருத்தரங்குச் செலவினமாகக் கணக்கிடப்பட்டிருந்தது.

(ஆ) பொலன்நறுவை தோட்டத்திற்கு உரித்தாக விசாரணையில் உள்ள வழக்கின் ரூபா 60,000 தொகையான நட்டஈடு கோரப்பட்டிருந்த போதிலும் இதற்காக ஒதுக்கங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 செலுத்த வேண்டிய கணக்குகள்**

---------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2006 ஆம் ஆண்டு முதல் செயற்பாடற்றுள்ள முகவர்களின் மூலம் பாலைச் சேகரிக்கும் பணிக்காக பெறப்படும் மீளச் செலுத்தப்பட வேண்டிய பிணை வைப்புத்தொகையான ரூபா 385,450 தொகையை தீர்க்காது மீளச் செலுத்த வேண்டிய பணமாகத் தொடர்ந்து கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2006, 2007 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளின் போது தரகர்களின் மூலம் தேங்காய் சந்தைப்படுத்துகையில் செலுத்தப்பட வேண்டியதாகக் காணப்பட்ட தரகுக் கட்டணத் தொகையான ரூபா 3,376,038 தொகை தீர்க்கப்படாது காணப்பட்டது.

(இ) 2000 ஆம் ஆண்டு முதல் 7 கடன்கொடுத்தோருக்கு செலுத்தவேண்டிய ரூபா 2,106,984 தொகையான மீதி தீர்க்கப்படாது காணப்பட்டது.

(ஈ) 2005 ஆம் ஆண்டு முதல் நிலவிவரும் பொலன்நறுவை பண்ணையின் 09 காவலாளிகளின் சம்பளம் அதிகரிப்பிற்கு உரித்தாகச் செலுத்தப்பட வேண்டிய ரூபா 16,540 தொகை தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 1992 ஆம் ஆண்டின் போது பொதுத் திறைசேரியில் இருந்து பெறப்பட்டிருந்த ரூபா 50,000,000 தொகையான வட்டியில்லாக் கடன் தொகை நீண்டகாலமாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போதும் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 பெறவேண்டிய கணக்குகள்**

-----------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பொலன்நறுவைப் பண்ணைகளுக்கு உரித்தான 06 ஆண்டு காலம் முதல் நிலவிவரும் அறவிடப்படாத கடன்பட்டோர் மீதிகளின் பெறுமதி ரூபா 168,264 ஆகக் காணப்பட்டது.

(ஆ) 2008 ஆம் ஆண்டு முதல் பால் செயற்திட்டம் தொடர்பில் 13 கடன்பட்டோரிடமிருந்து பெறவேண்டிய ரூபா 418,511 தொகை அறவிடப்படுவதற்கு தவறியிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது பால் விற்பனை நிலையங்களில் தலைமைக் காரியாலயத்திற்கு பணம் கையளிக்கப்படுகையில் ரூபா 49,500 தொகை குறைவாகக் கொடுக்கப்பட்டிருந்த போதிலும் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் அத் தொகையை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் போது மூன்று பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்ட பால், பால் செயற்திட்டத்திற்குக் கையளிக்கப்படுகையில் ரூபா 67,679 பெறுமதியான 1977.7 லீற்றர்கள் பால் குறைவாகக் கையளிக்கப்பட்டிருந்ததுடன் அத் தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(உ) சபையினால் மீளாய்வாண்டின் போது அமைச்சிற்காக ரூபா 2,644,404 செலவினம் ஏற்பட்டிருந்த போதிலும் அத் தொகை மீளளிப்பு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) நான்கு வருடங்களுக்கு மேலான காலமாக தீர்க்கப்படாதிருக்கும் கடன்பட்டோர் மீதிகளின் பெறுமதி ரூபா 27,121,209 தொகையாகும். இதில் 12 மில்லியன் தொகையை அறவிடுவதற்கு வழக்குத் தொடரப்பட்டுள்ளதாக தலைவர் அறிவித்திருந்தார்.

**2.2.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

பின்வரும் ஒவ்வொரு விடயத்திற்கும் எதிராகக் காண்பிக்கப்பட்டுள்ள சான்றாதாரங்கள் இன்மையால் அவற்றை கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதி செய்யவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ முடியாதிருந்தன.

| **விடயங்கள்** | **பெறுமதி** | **சமர்ப்பிக்கபடாத சான்று** |
|---|---|---|
| | **ரூபா** | |
| வியாபாரக் கடன்பட்டோர் | 64,607,665 | மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் |
| வைப்புகள் | 8,504,240 | மேற்படி |
| முற்கொடுப்பனவுகள் | 1,289,611 | மேற்படி |
| சகல பண்ணைகளிலும் உள்ள வங்கியில் உள்ள காசு | 6,088,042 | (i) வங்கி மீதிகளின் உறுதிப்படுத்தல்கள்<br>(ii) வங்கிக் கூற்றுக்கள் |
| பதப்படுத்தி பால் வழங்கல் | 541,432 | (i) அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடு<br>(ii) திட்டம்<br>(iii) பாதீடு |
| 8 நிலையான சொத்து விடயங்கள் | 496,540,715 | (i) விபரமான பட்டோலைகள்<br>(ii) பொருள் மெய்மையாய்வு அறிக்கைகள்<br>(iii) நாளதுவரையாக்கப்பட்ட நிலையான சொத்துப் பதிவேடு |

## 2.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களிற்கான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் 16(2) (அ) மற்றும் (ஆ) பிரிவுகள் | வங்கி மேலதிகப்பற்று பெறப்பட முன்னர் திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் அங்கீகாரம் இன்றி ரூபா 9,264,342 தொகையான வங்கி மேலதிகப்பற்று பெறப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது மேலதிகப்பற்று வசதிகளுக்காகச் செலுத்தப்பட்டிருந்த வட்டித் தொகை ரூபா 10,338,708 ஆகும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணத்தின் 757(2) ஆம் இலக்க நிதிப் பிரமாணம் | பண்ணைகள் தவிர சபையின் மிகுதிப் பொருள் மெய்மையாய்வு அறிக்கை 2011 மே 06 ஆம் திகதி வரை கூட கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்று நிருபம் | |
| | 5.2.5 ஆம் பந்தி | நாளதுவரையாக்கப்பட்ட நிறுவகத்தின் ஒட்டுமொத்த அங்கீகரிக்கப்பட்ட பாதீடு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| | 6.5.1 ஆம் பந்தி | நிதிக்கூற்றுக்களுடன் வருடாந்த வரைபு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | 6.5.3 ஆம் பந்தி | சபையினால் 2007 ஆம் ஆண்டு முதல் வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| | 7.4.1 ஆம் பந்தி | மீளாய்வாண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் ஒரு கூட்டம் மாத்திரமே நடைபெற்றிருந்தது. |
| | 8.3.8 ஆம் பந்தி | சபையினால் வெளித்தரப்பினருக்கு ரூபா 3,144,990 தொகை அன்பளிப்பாக வழங்கப்பட்டிருந்தது. |
| (ஈ) | 2006 ஜனவரி 04 ஆம் திகதிய சீஎஸ்ஏ/பீ/40 ஆம் இலக்க அரசாங்க செலவின முகாமைத்துவச் சுற்றறிக்கையின் 2.4 ஆம் பந்தி | பண்ணைகளில் உள்ள 3 வாகனங்கள் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சிற்கு அங்கீகாரம் இன்றி விடுவிக்கப்பட்டு இதற்காக ரூபா 198,600 தொகை செலவினம் மேற்கொள்ளப் பட்டிருந்தது. |
| (உ) | 2004 ஆகஸ்ட் 31 ஆம் திகதிய 353(5) ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தி | வாகனம் வாடகைக்கு பெறப்படுகையில் மாதாந்த வாடகை ரூபா 40,000 இற்கு மேற்படலாகாத போதிலும் இதற்கு முரணாக 04 வாகனங்கள் வாடகையில் பெறப்பட்டு எல்லைக்கு மேலாக மீளாய்வாண்டின் போது ரூபா 520,690 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஊ) | 2007 பெப்ரவரி 28 ஆம் திகதிய சீஎஸ்ஏ/பீ/40 ஆம் இலக்க அரசாங்கச் செலவின முகாமைத்து வச் சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தி | உள்நாட்டுப் பயணங்களின் போது உணவு மற்றும் தங்குமிடங்களுக்காகச் செலுத்தப்பட வேண்டிய ஹொட்டேல் கட்டணம் சபைச் செலவினத்தில் இருந்து ஏற்கப்படலாகாத போதிலும் ரூபா 1,890,465 தொகையான ஹொட்டேல் கட்டணம் சபை நிதியத்தினால் ஏற்கப்பட்டிருந்தது. |

## 3. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிதிசார் மீளாய்வு

#### 3.1.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், சபையின் மீளாய்வாண்டிற்கான தொழிற்பாட்டு விளைவுகள் ரூபா 176,463,447 ஆன தேறிய இலாபத்தை இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான தேறிய இலாபம் ரூபா 24,561,427 உடன் ஒப்பிடுகையில் நிதிசார் விளைவுகளில் ரூபா 151,902,020 தொகையான அதிகரிப்பு சுட்டிக்காட்டப்பட்டது. வருமானம் ரூபா 209,953,271 ஆல் அதிகரித்தமை நிதிசார் விளைவுகளின் முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாக இருந்தது.

#### 3.1.2 சர்ச்சைக்குரிய விடயங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சபையினால் 1995 ஆம் ஆண்டின் போது கம்பனியொன்றில் ரூபா 15,995,170 தொகை முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும் கம்பனி நட்டமடைந்த காரணத்தினால் பங்கிலாபங்களை வழங்க முடியாதிருந்தது. இக் கம்பனி இதுவரையில் கலைப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் அக் கம்பனியின் மதிப்பீட்டுக் கட்டணமாகவும் அதன் தலைவரது சம்பளங்களும் வெளிநாட்டுப் பயணத்திற்காகவும் ரூபா 1,291,250 கூட்டுத்தொகையான செலவினம் சபையினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) மகாபெரியதென்ன பண்ணையின் விற்பனையில் இருந்து பெறப்படும் விற்பனை இலாபத்தில் இருந்து கடனைத் தீர்க்கும் நிபந்தனையில் 2003 ஆம் ஆண்டில் கமத்தொழிலாளர் நம்பிக்கை நிதியத்திலிருந்து ரூபா 102,662,700 ஆன தொகை கடனாகப் பெறப்பட்டிருந்தது. சபையின் எந்தப் பண்ணையையும் தனியார் மயப்படுத்தலாகாது என அமைச்சரவையால் அறிவுறுத்தப்பட்டிருந்தமையால், மேற்குறித்த பண்ணையில் விற்பனைகள் மேற்கொள்ளப்படாது கடன்தொகையும் தீர்க்கப்படாதிருந்தது. இக் கடன் தொகை நிதி நிலைமை சாதகமானதை அடுத்து செலுத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுவதாக

தலைவரால் 2009 ஆம் ஆண்டின் போது கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போதும் அக் கடன் தொகையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 செயற்பாட்டு மீளாய்வு**

**3.2.1 பண்ணையின் இலாபத் தன்மை**

முன்னைய ஆண்டின் போதும் மீளாய்வாண்டின் போதும் முறையே சபையினால் 30, 32 கால்நடை உற்பத்தி மற்றும் இனவிருத்திப் பண்ணைகள் நிர்வகிக்கப்பட்டுவருவதுடன் பின்வரும் தேறிய இலாப/ நட்டங்கள் உழைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

| | 2010 | 2009 |
|---|---|---|
| இலாபம் உழைக்கப்பட்டிருந்த பண்ணைகளின் எண்ணிக்கை | 17 | 19 |
| உழைத்த தேறிய இலாபம் (ரூபா) | 421,584,237 | 245,569,716 |
| இலாபம் ஈட்டப்பட்டிருந்த பண்ணைகளின் எண்ணிக்கை | 15 | 11 |
| அடைந்த தேறிய நட்டம் (ரூபா) | 80,861,214 | 79,994,261 |

**3.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சபை நடவடிக்கைகளுக்குப் புறம்பான வீட்டுச் செயற்பாடுகளுக்காக தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்படுவது தொடர்பாக மீளாய்வாண்டின் போது ரூபா 220,526 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) தேர்தல் நடவடிக்கைகளுக்காக ரூபா 127,286 தொகை செலவிடப்பட்டிருந்தது.

**3.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

-----------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) போபத்தலாவ பண்ணைக்குக் கையளிக்கப்பட்டிருந்த 03 பால் விற்பனை நிலையங்கள் 2010 யூன் வரையிலும் மூடியிருந்ததுடன் அவ்விற்பனை நிலையங்கள் 2010 மார்ச் முதல் யூன் வரை ஏற்கப்பட்டிருந்த நட்டம் ரூபா 100,587 ஆகக் காணப்பட்டது.

(ஆ) மூடப்பட்டுள்ள போபத்தலாவ பண்ணைக்குச் சொந்தமான பால் விற்பனை நிலையங்களில் 2010 யூன் மாதம் அளவில் காணப்பட்ட ரூபா 10,377 பெறுமதியான 296.38 லீற்றர் பால் தொடர்பாக பண்ணை எவ்வித நடவடிக்கையையும் எடுத்திருக்கவில்லை.

(இ) பல்வேறு விபத்துகளினால் உயிரிழந்த வெலிகந்த பண்ணையில் உள்ள ரூபா 79,380 பெறுமதியான 14 விலங்குகள் புத்தகத்தில் இருந்து பதிவழிக்கப்பட்டிருந்தன.

(ஈ) விவசாயிகளின் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தில் 2003 ஆம் ஆண்டின் போது பெறப்பட்டிருந்த கடன் தொகை தீர்க்கப்பட்டிராமையால் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட வேண்டியதாக இருந்த வட்டித்தொகை ரூபா 10,266,270 ஆகக் காணப்பட்டது.

(உ) தலைமைக் காரியாலயத்தின் பதப்படுத்திய பால் செயற்திட்டத்திற்கு விநியோகிக்கப்பட்டிருந்த போபத்தலாவ பண்ணையில் உற்பத்தி செய்யப்பட்டிருந்த ரூபா 242,160 பெறுமதியான 4,036 லீற்றர் ஆட்டுப்பால் பழுதடைந்திருந்தன.

(ஊ) போபத்தலாவ பண்ணையில் உற்பத்தி செய்யப்பட்டிருந்த பால் தலைமைக் காரியாலயத்திற்கு அனுப்பிவைக்கப்படுகையில் 2010 மே

மாதம் வரை ரூபா 202,020 பெறுமதியான 2,722 லீற்றர் பால் குறைவிற்கும் பழுதடைவிற்கும் உட்பட்டிருந்தன.

(எ) காலாவதியாவதற்கு முன்னர் பழுதடைந்திருந்த ஒயாமடுவ பண்ணையின் சந்தைக்கான உற்பத்திகளிற்காக பணம் பெறப்படாமையால் ரூபா 73,344 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

(ஏ) பண்ணை உற்பத்திகளை விற்பனை செய்வதற்காக ஸ்தாபிக்கப்பட்ட ஒயாமடுவ பண்ணைக்குரிய 14 பால் விற்பனை நிலையங்கள் மீளாய்வாண்டின் போது பெறப்பட்ட நட்டம் ரூபா 641,476 ஆக இருந்தது.

## 3.5 விளைவற்ற சொத்துக்கள்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 1992 ஆம் ஆண்டின் போபத்தலாவை பண்ணையில் பொருத்தப்பட்ட விலங்கு உணவு களஞ்சியப்படுத்தப்படும் 05 டொன் கொள்ளளவைக் கொண்ட ஜீ. ஐ. சிலின்டர் வடிவான 02 தாங்கிகள் எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாது பொருத்தப்பட்ட ஆண்டு முதல் விளைவற்றுக் காணப்பட்டன.

(ஆ) பொலநறுவைப் பண்ணையில் 6,039 சதுர அடியிலான 07 மாட்டுத்தொழுவங்களும் 5,940 சதுர அடியிலான 03 மாட்டுத்தொழுவங்களும் பல்வேறு செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட்ட 09 கட்டிடங்களும் நீண்ட காலமாக பயன்பாட்டிற்கு எடுக்கப்படாதிருந்தன.

(இ) பொலநறுவை பண்ணையில் உக்கிய நிலையில் 22 வீடுகள் காணப்பட்டதுடன் இவை தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பரஸன்கஸ்வேவா பண்ணையில் 2007 ஆம் ஆண்டு முதல் பயன்படுத்தப்படாது கைவிடப்பட்டிருந்த சோதமடைந்து வரும்

கட்டிடங்களின் எண்ணிக்கை 11 ஆனதுடன் இது தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.6 மனிதவள முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு மேலதிகமாக 9 போதனாசிரியர்கள் ஆட்சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டின் போது ரூபா 475,407 தொகையான படிப்பணம் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) இவ் ஆட்சேர்ப்பிற்காகவும் பதவியணிக் கோப்பிற்காகவும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினதும் சம்பளங்கள் மற்றும் ஊழியர் கோப்பு ஆணைக்குழுவின் அங்கீகாரமும் பெறப்பட்டிருக்கவில்லை.

**3.7 முகாமைத்துவ திறமையீனங்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 2009 ஒக்டோபர் 06 அம் திகதிய கடிதத்தின் பிரகாரம் பொதுத் திறைசேரிக்குச் செலுத்தப்பட வேண்டிய ரூபா 10 மில்லியன் தொகையான பங்கிலாபம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ''போதிய அதிகாரமில்லாத பதவி உயர்வுகள் - உதவி பொது முகாமையாளர்'' தொடர்பில் முகாமைத்துவ திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 2009 யூலை 27 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் குறித்துரைக்கப்பட்டவாறு அப் பதவி உயர்வுகள் முறையாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) தலைமைக் காரியாலயத்தின் விற்பனை நிலையத்தில் 2009 ஆம் ஆண்டின் இரு மாதங்களிற்குள் ஏற்பட்ட ரூபா 900,000 தொகையான பொருட்கள் மற்றும் பணக் குறைவு தொடர்பாக உரிய நபர்களிடம் இருந்து அறவீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கந்தளாய் சோளப் பயிர்ச் செய்கை செயற்திட்டத்தின் பணம் பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் பெறப்பட்டிராத ரூபா 30,250 அறவிடப்படுவது தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2008 திசெம்பர் மாத சோளப் பயிர் விதைகள் விற்பனையால் பெறப்பட்ட ரூபா 79,750 தொகையை முறையின்றி பயன்படுத்தப்பட்டமை தொடர்பாக உரிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) தெதுரு ஓய நீர்ப்பாசனச் செயற்திட்டத்திற்காக நிக்வெரட்டிய பண்ணையில் 04 ஏக்கர்கள் விடுவிக்கப்படுவது தொடர்பாக அமைச்சரவை அங்கீகாரம் பெறப்படுதல், அக் காணி அளவை சட்டரீதியாக ஒப்படைத்து நிலையான சொத்துப் பதிவேடுகளில் இருந்து நீக்குதல் என்பன செய்யப்பட்டிருக்கவில்லை.

(எ) சபையிடம் இருந்த 04 வாகனங்கள் அமைச்சு மற்றும் அமைச்சுப் பதவியணிக்காக விடுவிக்கப்பட்டு சபையினால் ரூபா 624,670 தொகை பழுதுபார்த்தல் செலவினங்கள் ஏற்கப்பட்டிருந்தன.

## 3.8 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்ட செலவினம் மற்றும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீடானது வினைத்திறனான முகாமைத்துவக் கட்டுப்பாட்டின் கருவியொன்றாகப் பயன்படுத்தப்பட்டிருக்க வில்லையென அவதானிக்கப்பட்டது.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக விசேட அவதானம் கோரப்படுகின்றது.

(அ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு

(ஆ) நட்டங்கள் மற்றும் இழப்புகளின் பதிவழிப்பு

(இ) விளைவற்ற சொத்துக்கள்

(ஈ) ஆளணி முகாமைத்துவம்

(உ) நிதி முகாமைத்துவம்

(ஊ) இருப்புக் கட்டுப்பாடு

(எ) தீர்க்கப்பட வேண்டிய மீதி



ஒப்பம்: எச்.ஏ.எஸ் ஸமரவீர

கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

*Ms/v*

# வருமான அறிக்கை

| 2010 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான | குறிப்புகள் | 2010.12.31 இல் முடிவடைந்த வருடம் ரூபா | 2009.12.31 இல் முடிவடைந்த வருடம் ரூபா |
|---|---|---|---|
| வருமானம் | 5 | 1,099,722,297 | 889,769,026 |
| விற்பனைச் செலவினம் | | (797,818,226) | (718,381,807) |
| **மொத்த இலாபம்** | | 301,904,071 | 171,387,219 |
| ஏனைய செயற்படு வருமானம் | 6 | 19,625,364 | 19,562,865 |
| | | 321,529,435 | 190,950,084 |
| அரச மானியங்கள் | | 5,125,000 | 13,661,559 |
| | | 326,654,435 | 204,611,643 |
| விநியோகச் செலவினம் | | (3,574,785) | (4,045,274) |
| நிர்வாகச் செலவினம் | | (107,912,043) | (114,209,277) |
| ஏனைய செலவினம் | | (10,656,712) | (24,498,613) |
| **நடவடிக்கைகள் மூலமான இலாபம்** | 7 | 204,510,895 | 61,858,480 |
| நிதித்துறைச் செலவுகள் | | (28,695,065) | (37,772,053) |
| **வரிக்கு முந்திய இலாபம்/(நட்டம்)** | | 175,815,830 | 24,086,427 |
| சொத்துக்கள் விற்பனை மூலமான இலாபம் | | 3,129,328 | 475,000 |
| வரிகள் | 8 | (2,481,711) | - |
| **ஆண்டுக்கான இலாபம்** | | **176,463,447** | **24,561,427** |

# இறுதி ஐந்தொகை

| 2010 டிசம்பர் 31 இல் | குறிப்புகள் | 31.12.2010. ரூபா | 31.12.2009 ரூபா |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறையற்ற சொத்துக்கள்** | | | |
| ஆதனங்கள், இயந்திர உபகரணங்கள் | 10 | 499,473,587 | 486,315,665 |
| ஏனைய சொத்துக்ககள் | 11 | 481,819,391 | 408,733,500 |
| | | 981,292,978 | 895,049,165 |
| கிளை நிறுவனங்களில் முதலீடு | 9 | 15,995,171 | 15,995,171 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| பதிவேட்டுச் சொத்துக்கள் | | 168,272,292 | 130,782,456 |
| வர்த்தக மற்றும் ஏனைய பெறுகைகள் | | 145,382,142 | 115,596,084 |
| காசும் காசுக்குச் சமமானதும் | | 50,489,106 | 74,556,881 |
| | | 364,143,540 | 320,935,421 |
| **மொத்த சொத்துக்கள்** | | **1,361,431,689** | **1,231,979,757** |
| **பங்குகளும் பொறுப்புக்களும்** | | | |
| **மூலதனம் மற்றும் ஒதுக்கீடு** | | | |
| மூலதனம் | | 576,587,649 | 576,587,649 |
| ஒதுக்கீடுகள் | | 153,857,557 | 154,573,100 |
| இலாப நட்டக் கணக்கு | | (41,211,528) | (217,674,975) |
| | | 689,233,678 | 513,485,774 |
| சுழலும் நிதியம் | | 37,500,000 | 37,500,000 |
| **நடைமுறையற்ற பொறுப்புக்கள்** | | | |
| நீண்டகால பொறுப்புக்கள் | 12 | 117,863,653 | 134,901,135 |
| பின்தள்ளிய பொறுப்புக்கள் | 14 | 166,466,691 | 154,442,001 |
| திறைசேரிக் கடன் | 13 | 50,000,000 | 50,000,000 |
| | | 334,330,344 | 339,343,136 |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| வர்த்தகமும் ஏனைய செலுத்துகைகளும் | 15 | 249,065,881 | 223,481,475 |
| ஒரு வருடத்தினுள் செலுத்தப்பட வேண்டிய நீண்டகால கடன்கள் | | 17,037,444 | 17,037,444 |
| வங்கி மேலதிகப்பற்று | | 34,264,342 | 101,131,928 |
| | | 300,367,667 | 341,650,847 |
| **மொத்த பங்குகளும் பொறுப்புக்களும்** | | **1,361,431,689** | **1,231,979,757** |

**சபையின் சார்பிலும் சபைக்காகவும் கைச்சாத்திடப்பட்டது:**

தலைவர்

கணக்காளர்

# காசுப்பாய்ச்சல் அறிக்கை

| 2010 டிசம்பர் 31 இல் | 2010<br>ரூபா | 2009<br>ரூபா |
|---|---|---|
| **செயற்படு நடவடிக்கைகள் மூலமான காசுப்பாய்ச்சல்** | | |
| ஆண்டுக்கான நிகர இலாபம்/(நட்டம்) | 176,463,447 | 24,561,427 |
| காசுப் பரிமாற்றமற்ற சீராக்கல்கள் | | |
| காணி, இயந்திர, உபகரண விற்பனை மீதான இலாபம்/(நட்டம்) | (3,129,328) | - |
| தேய்மானம் | 32,218,289 | 62,655,033 |
| ஓய்வுக்கால பணிக்கொடைகளுக்கான ஏற்பாடு | 29,906,056 | 6,131,944 |
| அறவிட முடியாக் கடன்களுக்கான ஏற்பாடு | 13,503,564 | 9,022,049 |
| வட்டி | 26,817,840 | 36,661,621 |
| போனஸ் தொகைக்கான ஏற்பாடு | 8,206,000 | 6,000,000 |
| செயற்படு மூலதனக் கட்டணங்களுக்கு முந்திய நடவடிக்கைகளிலிருந்து பெறப்பட்ட காசு | 283,985,868 | 145,032,074 |
| **செயற்படு மூலதனம் அதிகரிப்பு/(குறைவு)** | | |
| கையிருப்புக்களில் அதிகரிப்பு/(குறைவு) | (37,489,836) | 23,555,490 |
| வர்த்தக மற்றும் ஏனைய பெறுகைகளில் அதிகரிப்பு/(குறைவு) | (40,281,389) | 8,424,636 |
| வர்த்தக மற்றும் ஏனைய கொடுப்பனவுகளில் அதிகரிப்பு/(குறைவு) | 17,378,406 | (4,025,237) |
| செயற்படு நடவடிக்கைகளிலிருந்து நிகர காசு | 223,593,049 | 172,986,962 |
| செலுத்திய வட்டி | (26,817,840) | (36,661,621) |
